Registered as a News Paper in Sri Lanka.

# ஈழநாதம்

THE EELANAATHAM

● மக்கள் தினசரி ●

நாதம் 01 | பிரமோதூத ஸ்ரீ வைகாசி மீ 12 ஆம் உ | சனிக்கிழமை | (26 - 05 - 1990) | ஹிஜ்ரி 1410 | ஜுல்ஹ 01 | ஓசை 97

## குதிரைகள் தேசிய சொத்து!

(நெடுந்தீவு)

நெடுந்தீவிலுள்ள குதிரைகள் அனைத்தும் தேசிய சொத்தாக்கப்பட்டுள்ளன குதிரைகளைப் பிடித்துத் தீவுக்கு வெளியே கொண்டுசெல்வது தடைசெய்யப்பட்டுள்ளது. வரலாற்றுப் பெருமை மிக்கதும், உல்லாசப் பயணிகளின் சிறப்பிடமாகவும் மதிக்கப்படும் நெடுந்தீவின் பெருமைக்கு குதிரைகள் இங்கு வாழ்வது விசேட காரணமாகும். குதிரைகள் நிறைந்திருந்த தீவகத்தில் தற்பொழுது சிறு தொகையே எஞ்சியிருப்பது குறிப்பிடத்தக்கது. குதிரைகள் அருகிவருவதைத் தடுப்பதுடன் அவற்றின் பாதுகாப்புக்கும் ஒத்துழைக்க வேண்டுமென மக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். குதிரைகளைத் தனியார் தமதுரிமையாக வைத்திருப்பதும், விற்பதும் தடைசெய்யப்பட்டுள்ளன. விடுதலைப் புலிகள் குதிரைகளின் பாதுகாப்பைத் தமது விசேட கவனத்திற்கு எடுத்துள்ளனர். (62)

# சண்டை மூளுமா? சமாதானம் நிலவுமா? நிலைமையை நேரில்

# கண்டறிய வெளிநாட்டு தூதுவர் யாழ்வருகை

(யாழ்ப்பாணம்)

தமிழீழத்தில் மீண்டும் விடுதலைப் புலிகளுக்கும் சிங்கள இராணுவத்திற்கும் மத்தியில் யுத்தம் ஏற்படும் சாத்தியக்கூறுகள் இருக்கின்றதா? அல்லது புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான பேச்சுக்கள் சுமுகமாக நீடித்து சமாதானம் தொடர்ந்து நீடிக்குமா இந்தக் கேள்விகளுக்கு விடை காணும் நோக்கில் மேற்கத்தைய நாடுகளின் தூதுவர்கள் இவ்வாரம் யாழ்ப்பாணம் படையெடுத்து வந்து விடுதலைப் புலிகளுடன் பேசி வருகிறார்கள்.

ஏற்கனவே கனடா, பிரிட்டன், அமெரிக்கா போன்ற தூதரகங்களின் முக்கிய ராஜதந்திரிகள் யாழ்ப்பாணம் வந்துள்ளார்கள். நேற்றுமாலை கனடா தூதுவர் விடுதலைப் புலிகளின் யாழ்ப்பாண அரசியல் தலைமைக் காரியாலயத்திற்கு விஜயம் செய்து அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடன் இரண்டு மணிநேரம் கலந்தாலோசனை நடத்தினார். நாளை காலை பிரித்தானிய தூதுவர் திரு. கிளாட் ஸ்ரோன் புலிகளின் காரியாலயத்திற்கு விஜயம் செய்கிறார். இவ்வார இறுதியில் அவுஸ்திரேலிய தூதுவரும் புலிகளை சந்திக்க இருக்கிறார்.

தமிழீழத்திலுள்ள அரசியல் நிலைமை, அரசு - புலிகளின் பேச்சுவார்த்தை, இந்தப் பேச்சுக்களில் எழுந்துள்ள மந்த நிலை, மாகாண சபைத் தேர்தல், 6ஆவது சட்டத் திருத்த நீக்கம் ஆகிய விடயங்கள் பற்றி விடுதலைப் புலிகளின் கருத்தை அறிய மேற்கத்தைய நாடுகள் ஆர்வம் காட்டுகின்றன. அரசு புலிகள் பேச்சில் முரண்பாடு முற்றி மோதல் ஏற்படுமா அல்லது சமாதான பேச்சுக்கள் வெற்றியீட்டி அரசியல் தீர்வு ஏற்படுமா என்பதனை ஆராய்ந்து அறிவதிலும் இந்நாடுகள் அக்கறை காட்டுகின்றன.

### ○ மலையகத் தமிழரை

# நாடு கடத்தும் முயற்சியை

# தமிழகம் எதிர்க்க வேண்டும்

## விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கோரிக்கை

(தர்மபுரம்)

“மலையகம் வாழ் தமிழ் மக்கள் மீது சிங்கள அரசு இன்று அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது, நாடுகடத்த முனைந்துள்ளது. எம்மைப்பொறுத்தவரை தமிழ் நாடும், தமிழக முதல்வரும் இவர்களுக்கு சிறிலங்கா அரசு குடியுரிமை வழங்கவேண்டும் எனக்கேட்க வேண்டும்; நாடுகடத்தும் முயற்சிக்கு ஆதரவு தரக்கூடாது”

இவ்வாறுவிடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் தலைமைச் செயலகம் நேற்று கோரிக்கை விடுத்தது.

மக்களின் போராட்டம் தொடங்கியது.

அன்றில் இருந்து இன்று வரை மலையகம் வாழ் தமிழ் மக்களின் பிரச்சினைகள் அவர்களோடு கலந்து பேசாமலேயே தீர்க்கப்படுகின்றன.

மனித உரிமைகள், மனிதத் தன்மைகள் இவற்றை மதியாது ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன.

யகம் வாழ் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டன.

அம் மக்களை பிரதிநிதித்துவப் படுத்திய துரோகத் தலைமைகள் தமக்கு சலுகைகளை பெற பிரார்த்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### பெருந்தோட்டங்களில்

## வெலப்பிட்டி ஹந்த விகாரையில் இருந்து ஆயுதங்கள் மீட்பு

(கொழும்பு)

கதிர்காமம் வெலப்பிட்டி ஹந்த விகாரையில் இருந்து நான் துப்பாக்கிகள், இரண்டு உள்ளூரில் செய்யப்பட்ட துப்பாக்கிகள் முப்பத்தெட்டு துப்பாக்கி ரவைகள், மூன்றுலட்சத்து தொன்னூற்று நாலாயிரம் ரூபா ரொக்கப்பணம், அடையாள அட்டை என்பனவற்றைப் பொலிஸார் மீட்டெடுத்துள்ளனர்.

விகாரை ஊழியர் ஒருவர் தமது சம்பளத்தைக் கேட்ட பொழுது, அந்த விகாரை

(6ஆம் பக்கம் பார்க்க)

## அடையாளம் காணப்படாத இளைஞனின் சடலம்

(யாழ்ப்பாணம்)

வாகன விபத்தொன்றில் படுகாயமுற்ற நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஒருவரின் சடலம் உரிமை கோரப்படாத நிலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இருபத்தைந்து வயது மதிக்கத் தகுந்த இவ்விளைஞனின் சடலம் பிரேத பரிசோதனையின் பின் இன்னும் ஓரிரு தினங்களில் அரசாங்கச் செலவில் அடக்கம் செய்யப்படும் என யாழ். போதனா வைத்தியசாலைப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன(லோ

## இன்று 110 பேர் விடுதலை

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களில் 110பேர் இன்று காலை 11 மணியளவில் யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலடி முன்றலில் விடுவிக்கப் படுவார்கள்.

# விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கோரிக்கை

(தர்மபுரம்)

**"மலையகம் வாழ் தமிழ் மக்கள் மீது சிங்கள அரசு இன்று அடக்கு முறையைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது, நாடுகடத்த முனைந்துள்ளது. எம்மைப்பொறுத்தவரை தமிழ் நாடும், தமிழக முதல்வரும் இவர்களுக்கு சிறிலங்கா அரசு குடியுரிமை வழங்கவேண்டும் எனக்கேட்க வேண்டும்; நாடுகடத்தும் முயற்சிக்கு ஆதரவு தரக்கூடாது"**

**இவ்வாறுவிடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் தலைமைச் செயலகம் நேற்று கோரிக்கை விடுத்தது.**

''தமிழக முதல்வருக்கும் தமிழக மக்களுக்கும் ஒரு வேண்டுகோள்'' என்ற தலைப்பில் விடுதலைப் புலிகள் நேற்று விடுத்த அறிக்கை வருமாறு-

21-5-90 அன்று தமிழீழமெங்கும் மலையகம் வாழ் மக்களில் ஒரு இலட்சம்பேரை நாடு கடத்த சிறிலங்காஅரசு முயல்வதைக் கண்டித்தும் மலையகத்தில் தமிழ் மக்கள் மீது நடத்தப் படும் அடக்கு முறைகள், கொலைகளை கண்டித்தும் பொது வேலை நிறுத்தம் இடம் பெற்றது.

இவ் வேலை நிறுத்தம்முழுமையாக வெற்றியும் பெற்றது.

1949ம் ஆண்டு திட்டமிட்டு சிங்கள அரசு மலையகம் வாழ் தமிழ் மக்களின் குடியுரிமையை பறித்தது.

1949ஆம் ஆண்டு மலையகம் வாழ் தமிழ் மக்களின் குடியுரிமை பறிபோவதை எதிர்த்ததோடுதான் தமிழ்பேசும் மக்களின் போராட்டம் தொடங்கியது.

அன்றில் இருந்து இன்று வரை மலையகம் வாழ் தமிழ் மக்களின் பிரச்சினைகள் அவர்களோடு கலந்து பேசாமலேயே தீர்க்கப்படுகின்றன.

மனித உரிமைகள், மனிதத் தன்மைகள் இவற்றை மதியாது ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன.

பொருட்களை வாங்கி விற்பதுபோல

ஏதோ பொருட்களை வாங்கி விற்பதுபோல் மலையகம் வாழ் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டன.

அம் மக்களை பிரதிநிதித்துவப் படுத்திய துரோகத் தலைமைகள் தமக்கு சலுகைகளை பெற பிரார்த்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# பாராளுமன்ற உறுப்பினர்களின் வாகனங்கள் கைமாற்றம்

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட மோட்டார் வாகனங்கள் மற்றவர்களுக்கு மாற்றப்பட்டுள்ளதாம். பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தீர்வையில்லாமல் சலுகை விலையில் வழங்கப்பட்ட இந்த வாகனங்கள் கைமாறியிருந்தால், அதுதொடர்பான தகவல்களைஅரசாங்கம் பொது மக்களிடம் இருந்தும் எதிர்பார்க்கிறது. இதே வேளை, அரசாங்க விநியோகப் பகுதி ஆணையாளர், வாகனங்களைப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றவர்களுக்கு மாற்றிக் கொடுத்திருந்தால், அதுதொடர்பாக விசாரணையை மேற்கொள்ளும்படி பொலிஸாரைக் கேட்டுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட வாகனங்கள் பொதுமக்களின் சேவைக்காகவே வழங்கப்பட்டவை. வாகனத்தை விற்பதோ அல்லது கைமாற்று

(6ஆம் பக்கம் பார்க்க)

# பணமாக பெற்றுக் கொள்ளாமைக்கு ஊழியர் பற்றாக்குறையே காரணம்

(யாழ்ப்பாணம்)

ஆயுட் காப்புறுதி செலுத்துவோர் தமது கட்டுப் பணத்தை பணமாக செலுத்துவது சம்பந்தமாக மக்களுக்கு வசதிகள் செய்து கொடுப்பதில் ஊழியர் பற்றாக்குறை காரணமாக சில சிரமங்களை எதிர்நோக்குவதாக காப்புறுதிக் கூட்டுத்தாபன யாழ்ப்பாணக் கிளை பிராந்திய முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

மேலும் யாழ் .தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள் பயிற்சிக்காக தம்முடன் வந்து உதவி செய்வதாகவும் ஆனால் நிரந்தர உத்தியோகத்தர்கள் நியமிக்கப் படும்வரை ஆயுட் காப்புறுதியில் பணமாக செலுத்துவது மிகக் கடினமாகும் என்று பிராந்திய முகாமையாளர்

(6ஆம் பக்கம் பார்க்க)

# மா, பாண் விலை உயர்வு

# அரிசி, சீனிவிலைகுறைப்பு

(யாழ்ப்பாணம்)

மாவின் விலையில் மாற்றம் ஏற்பட்டிருப்பதாக யாழ்ப்பாணம் பிரதி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி அறிவித்திருக்கிறார். வரும் திங்கட் கிழமையில் இருந்து (28-5-90) இம் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளார்,

ஒரு கிலோ மாவின் உணவுக் களஞ்சிய விலை ரூபா 13.45 ஆகவும் மொத்த விற்பனை விலை ரூபா 13.80 ஆகவும் சில்லறைவிலை ரூபா 14.25 ஆகவும் அதிகரித்துள்ளது,

பாணின் விலைரூபா 5·30 ஆகக் கூட்டப்பட்டுள்ளது. இவ் விலை மாற்றங்களை கூட்டுறவுச் சங்கங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளவும் என்று உணவுக் கட்டுப்பாட்டுக் கிளை தெரிவித்துள்ளது.

இப்பொழுது ஒரு கிலோ மாவின் விலை பதின்மூன்று ரூபாய் ஐம்பது சதம்.பாணின விலை நான்கு ரூபாய் தொண்ணூறு சதமாகும்.

அரிசி சீனி விலை குறைக்கப்பட்டுள்ளதாக அரசு அறிவித்திருக்கிறது. இது உடனடி

(6ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே


பக்கம் 3
சத்தீஸ் மாஸ்ரரின் A/L இரசாயன பாடம்
வெளியீட்டுச் செய்திகள்

பக்கம் 5
முஸ்லிம்களின் இறைமையும் தமிழீழ விடுதலைப்போராட்டமும்
ஆசிரியர் தலையங்கம்
ஊர்சுற்றி
குண்டுவீச்சிலிருந்து தப்புவது எப்படி?

பக்கம் 2, 4
செய்திகள்
விளம்பரங்கள்


(யாழ்ப்பாணம்)

வாகன விபத்தொன்றில் படுகாயமுற்ற நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட ஒருவரின் சடலம் உரிமை கோரப்படாத நிலையில் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இருபத்தைந்து வயது மதிக்கத் தகுந்த இவ்விளைஞனின் சடலம் பிரேத பரிசோதனையின் பின் இன்னும் ஓரிரு தினங்களில் அரசாங்கச் செலவில் அடக்கம் செய்யப்படும் என யாழ். போதனா வைத்தியசாலைப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன(லோ

## இன்று 110 பேர் விடுதலை

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களில் 110பேர் இன்று காலை 11 மணியளவில் யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலடி முன்றலில் விடுவிக்கப் படுவார்கள்.

பெருந்தோட்டங்களில்

# கொத்தணி முறை நீக்கம் தோட்டத்துரை முறை அமுல்

(கொழும்பு)

பெருந்தோட்டங்களைக் கொத்தணி முறையில் நிர்வகிக்கும் முன்னாள் அமைச்சர் காமினிதிஸாநாயக்காவின் திட்டத்தைதான் ...லைத்துவிட்டு, பழைய தோட்டத்துரை முறைக்குத் திரும்பியுள்ளதாகத் தோட்டத் தொழில் அமைச்சர் ரஞ்சன் விஜெரெட்ணா கொழும்பில் தெரிவித்தார்.

கொத்தணி முறை அவசரமாக மேற்கொள்ளப்பட்ட ஒரு முயற்சி என்றும், உலக வங்கி கொத்தணி முறையில் தோட்டங்களை நிர்வகிப்பதை ஒரு பரீட்சார்த்த முயற்சியாக மேற்கொள்ளும் படி மட்டும் கேட்டிருந்தது என்றார் ரஞ்சன் விஜெரெட்ணா.

(6ஆம் பக்கம் பார்க்க)

# போபோர்ஸ் ஆவணங்கள் இந்தியாவிடம் ஒப்படைப்பு

போபோர்ஸ் ஆயுத ஊழல் தொடர்பான இரகசிய ஆவணங்களை சுவீடன் அரசு இந்திய அரசுக்கு அனுப்பி வைத்திருக்கிறது.

ராஜீவ்காந்திஇந்தியப்பிரதமராக பதவி வகித்த காலத்திலேயே இந்தபோபோர்ஸ்ஆயுத ஊழல் சம்பவங்கள் இடம் பெற்றன.

வி. பி. சிங். இந்தியாவின் புதிய பிரதமராக பதவியேற்ற பின்னர் இந்த போபோர்ஸ் ஆயுத ஊழல் விவகாரம் சூடு பிடித்தமை தெரிந்ததே.

இந்த ஊழல் தொடர்பான இரகசிய ஆவணங்களை சுவீடன் இந்தியாவுக்கு அனுப்பி வைத்திருக்கிறது

# சகல பாடசாலைகளிலும் கூட்டுறவுக் கடைகள்

(கொழும்பு)

நாட்டின் சகல பாடசாலைகளிலும் கூட்டுறவு கடைகள் ஆரபிக்கப்படும்.

மேல் மாகாண சபையின் கூட்டுறவு மற்றும் கைத்தொழில் அமைச்சர் ஜனாப் ஏ, எம். யூசுப் இதனைத் தெரிவித்தார்.

பம்பலப்பிட்டியில் உள்ள தனதுஅமைச்சுஅலுவலகத்தில் நேற்று முன்தினம் பத்திரிகையாளர்மாநாடு ஒன்றை நடத்தினார்

பாடசாலை மாணவர்களின் மதிய உணவுக்காக தினசரி மூன்று ரூபா பெறுமதியான உணவு முத்திரைகளை வழங்க

(6ஆம் பக்கம் பார்க்க)

# பாவற்குளத்தில் பொலிசார் புலிகளால் தடுத்து வைப்பு

(வவுனியா)

பாவற் குளத்திலிருந்து நேற்று தமிழீழ விடுதலைப் புலிகளது அனுமதி பெறாமல் ஜீப்பில் வந்த பொலிசாரை மன்னார் வீதியில் வேப்பங்குளம் காவல் அரனில் விடுதலைப் புலிகள் சுமார் அரைமணித்தியாலங்கள் மறித்துவைத்து எச்சரித்து விடுதலை செய்தனர்.

தமிழீழ விடுதலைப்புலிகள் பொலிசாரை வழிமறித்ததன் நோக்கம் தங்களது அனுமதியின்றி வந்தால் அவர்களுக்கு வழியில் ஏதும் நடந்து விட்டால் தாங்களே பொறுப்பேற்க வேண்டியிருக்கும் என்பதற்காகவே மறித்தார்கள் எனத் தெரியவருகிறது (தி)

# பொலிஸ் பரீட்சையில் தெரிவானோருக்கு பயிற்சி

(மட்டக்களப்பு)

வட-கிழக்கு மாகாணங்களில் அண்மையில் நடைபெற்ற பொலிஸ் நேர்முகப் பரீட்சையில் தெரிவானவர்களுக்கான பயிற்சி ஓரிரு வாரங்களில் ஆரம்பிக்கப்படும்.

இத்தகவலை பொலிஸ் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, நேர்முகப் பரீட்சையில் தெரிவானவர்களுக்கான பொலிஸ் அறிக்கை தற்போது கோரப்பட்டுள்ளது.

வட-கிழக்கு மாகாணங்களில் பொலிஸ் பயிற்சி கல்லூரி இல்லையென்பதால் களுத்துறை, கண்டி, மொன

(6ஆம் பக்கம் பார்க்க)

வரி விளம்பரம்

விற்பனைக்கு

புதிய அச்சடிக்கும் திருமணக் கார்ட்டுகள், சகல டிசைன்களிலும் விற்பனையாகிறது. உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்ய ஸ்ரீ காந்த் புத்தகசாலை, மின்சார நிலையவீதி, பஸ் நிலைய முன்புறம், யாழ்ப்பாணம்.

(B/ 1002)


# உலர் வலய விவசாய அபிவிருத்திக்கு 18 கோடி சுவிஸ் நிறுவனம் உதவி

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணத்தின் விவசாய புனர் அபிவிருத்திக்கெனவும் அநுராதபுரம், பொலநறுவை, புத்தளம், அம்பாந்தோட்டை, மொனறாகலை ஆகிய மாவட்டங்களின் விவசாய முன்னேற்றத் திட்டங்களுக்கெனவும் பதினெட்டுக்கோடி ரூபாநிதியைசுவிஸ்கொங்கிரஸ் வேசன் நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்வது தொடர்பான ஒப்பந்தம் ஒன்றை அரசாங்கம் நேற்றுக் கைச்சாத்திட்டது.

ஆசிய அபிவிருத்தி வங்கியும் சுவிஸ் நிறுவனமும் இணைந்து இந்தத்திட்டத்திற்கான பிரேரணைகளை பொறுப்பேற்க உள்ளன.

விவசாய உபதிட்டங்களுக்கு நிதி உதவி வழங்குதல், கால் நடைப்பண்ணை, கடற்றொழில், விவசாயத்தொழிலுக்கான வர்த்தகத்துறை, பொதுமக்களுக்கான பொது வசதிகள் வழங்குதல் என்பன இத்திட்டத்தின் பிரதான அம்சங்களாகும். அந்த மாவட்டத்திலுள்ள கடன் வழங்கும் நிறுவனத்தின் நடவடிக்கைகளைப் பரிசீலிக்க வெளிக்கள உத்தியோகத்தருக்கும், நிர்வாக அதிகாரிகளுக்கும் பயிற்சி அளிக்கப்படும்.

சுவிஸ்லாந்துத் தூதுவரும் நிதியமைச்சரின் செயலாளரும் இவ் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார்கள்.

## செல்வநாயகம் நினைவு நூல்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் முதுபெருந் தலைவராகிய அமரர் எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களின் வாழ்க்கை வரலாறு பற்றிய நூலொன்று கனடாவில் வெளியிடப்படவுள்ளது.

இந்நூலை பிரபல அரசியல் அறிஞரும் தற்போது கனடாவிலுள்ள நியூபுறுன்ஸ்விக் சர்வகலாசாலையின் அரசியல் விஞ்ஞான பேராசிரியருமான ஏ. ஜே. வின்சனே எழுதும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.

இந்நூல் ஆங்கில மொழியிலேயே அச்சிடப்படவுள்ளது. பேராசிரியர் ஏ. ஜே. வின்சன் தந்தை செல்வாவின் மருமகன் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (மு)

## பூநகரி பாடசாலைக் கட்டடம் அரைகுறை நிலையில்

(ஈச்சமோட்டை)

பூநகரி நல்லூர் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கென கட்டடம் ஒன்று கல்வித் திணைக்களத்தினால் நிதி ஒதுக்கப்பட்டு அவ் ஒப்பந்த வேலையை எடுத்தவர் கடந்த இரண்டு வருடங்களாக வேலை செய்துமுடிக்காமல் கட்டப்பட்ட குறையில் தற்போது காட்சியளிக்கிறது.

இது பற்றி பலதடவைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டும் இதுவரை எந்தவித பயனும் கிடைக்கவில்லை என்றும், இந்த பாடசாலையில் சென்ற மாதம் நடைபெற்ற கல்விப் பொதுத்தராதர சாதாரணப் பரீட்சை கட்டட வசதிக் குறைவால் மாணவர்கள் பரீட்சை எழுத பெரும் சிரமப் பட்டார்கள் என்றும் இது ஓர் வளர்ந்துவரும் பாடசாலை ஆகையால் சம்பந்தப்பட்டவர்கள் கூடிய கவனமெடுத்து இக் கட்டடத்தை அமைக்கப் பெரிதும் உதவுவார்கள் என தாம் நம்புவதாக நல்லூர் ஆலங்சேணி எவரெடி விளையாட்டுக் கழகத் தலைவர் ச. நடராசலிங்கம் கேட்டுக் கொண்டுள்ளார். (43)

## ...பொதுக்கூட்டம்

(மட்டக்களப்பு)

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கல்வியணி சாராப் பணிப்யாளர் சங்கத்தின் 5 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் இம் மாதம் 30 ஆம் திகதி நடைபெறும்.

பல்கலைக்கழக மண்டபத்தில் நடைபெற விருக்கும் இக்கூட்டத்தில் உபவேந்தர் பேராசிரியர் எஸ். சந்தானம் சிறப்புரையாற்றுவார் என சங்க செயலாளர் திரு. எஸ் எஸ் சூரியகாந்தன் தெரிவித்தார். (37)

## தேசியவீரர் நினைவுதினம் நடை பெறவில்லை

மட்டக்களப்பு மாவட்டத்தில் தேசிய வீரர்கள் நினைவு தினம் தொடர்பான வைபவங்கள் எதுவும் (22.5 90) அன்று நடை பெறவில்லை.

தேசிய கொடிபறக்க விடுமாறு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு செயலாளர் சகல திணைக்களங்களுக்கும் பணிப்புரை விடுத்திருந்தார்.

ஸ்ரீலங்கா இராணுவ முகாம்களிலும், விமானப்படை முகாமிலும் தான் தேசிய கொடி பறக்க விடப்பட்டிருந்தது. (37)

## சுய நிர்ணயம் பெறும்வரை போராட்டம்

(திருக்கோணமலை நிருபர்)

தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமையை வென்றெடுக்கும் வரை எமது போராட்டம் தொடரும் என தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் திரு யோகரத்தினம் யோகி திருக்கோணமலை திருக்கடலூர் என்னும் இடத்தில் இடம்பெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றிய போது கூறினார்.

திரு. யோகி அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது நாங்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு மக்கள் பூரண ஆதரவு தரவேண்டும். மக்களின் ஆதரவு முழுமையாக எங்களுக்குக் கிடைக்குமாக இருந்தால் எங்கள் உரிமைகளை எளிதில் பெறலாம். கடந்த காலங்களில் எமது மக்கள் எங்களுக்கு அளித்த ஆதரவினை நாங்கள் மறந்துவிடவில்லை. எல்லோரும் ஒரே அணியில் நின்று போராடினால் எமக்கு வெற்றி கிடைப்பது உறுதி. எங்களை யாரும் ஏமாற்ற முடியாது. ஏமாறவும் மாட்டோம். எங்களை ஏமாற்ற நினைப்பவர்களே ஏமாறுவார்கள் என்றார்.

## சர்வமத பிரார்த்தனைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மனிதத்துவத்தை வளர்ப்பதில் சமயங்களின் பங்கு என்னும் பொருள்பற்றி கம்பன் கழக அமைப்பாளர் இ. ஜெயராஜ், நாளை ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணியளவில் 2ஆம் குறுக்குத்தெரு கிறிஸ்துநாதர் ஆலய மண்டபத்தில் (மறையகம்) உரை நிகழ்த்துவார்.


DSI

நீண்டகாலப் பாவனையில் முதலிடம் வகிக்கும் DSI சைக்கிள் ரயர்கள் பின்வரும் தொழில் நுட்பச் சிறப்புக்களைக் கொண்டன

I. உறுதியான இரட்டை நைலோன் கன்வஸ் ரயர் வெடிப்பதை தடுக்கிறது.
II. இறப்பர் பூசப்பட்ட 4 கம்பிகள் இவை துருப்பிடிப்பதோ கம்பிக்கட்டு கழர்வதோ இல்லை.
III விசேட இறப்பர் கலவையினால் உருவாக்கப்பட்ட பல்வேறு வடிவப் பூக்கள் தேய்மானத்தை தடுக்கின்றன.

மற்றும்: Carmats, Doormats, Pedal Cover, Rubber Hose, Motor Cycle Tyre (250 x 17, 300 x 17, 275 x 14)

ஆகியவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

DSI கொன்சூமர் சேர்விஸ் சென்ரர்

(ஞானப்ஸ் ஸ்ருடியோ அருகாமை)
281,C சி. பொன்னம்பலம் வீதி,
(மணிக்கூட்டு வீதி)
யாழ்ப்பாணம்.

நீண்டகாலப் பாவனைக்கு DSI தயாரிப்புகள்

(B 954)


## இன்றைய திரைவானில்


**மனோகரா - (யாழ்)**
தினசரி 4.00, 6.30, 9.30
சனி. ஞாயிறு
10-30, 2–30.
6.30 & 9.30
CLINT EASTWOOD IN HEART BREAK RIDGE
வெகுவிரையில்
ராஜா சின்ன ரோஜா

**வெலிங்டன் (யாழ்)**
ரகுமான் - நதியா
தினசரி 4-00, 6-45, 9-30
சனி ஞாயிறு 10-30, 2-30, 6-30, 9-30
நிலவே மலரே
(புதிய பிரதி)
B/859

**ஹரன் - (யாழ்)**
தினசரி 4·00, 7.00, 9.30
விடுமுறை நாட்களில்
4 காட்சிகள்
ஜெய்சங்கர் K.R. விஜயா
அசோகன் நாகேஸ்
V. K. ராமசாமி
தேங்காய் சீனிவாசன்
சுருளிராஜன்
நடித்த
திருடி
B 878

**வின்ஸர் - யாழ்**
தினசரி 4-00, 6-45, 9-45
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில்
10·30, 2.30, 6.30
பாக்கியராஜ் சோபனா
இது நம்ம ஆளு
(புதிய வெளியீடு)

**ராஜா (யாழ்)**
தினசரி 4·45, 7·00, 9·45
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில்
10·00, 2·00, 4·45, 7:00, 9·45
Terence Hill Bud Spence
I AM FOR THE HIPPOPOTAMUS

**நியூ சாந்தி (யாழ்)**
தினசரி 4.00, 6.30
7.00 9.00
சனி ஞாயிறுவிடுமுறை நாட்களில்
10:30 2:30,: 4,00 6:00
7-30 9-00
UNMASKING THE IDOL
(Color)

**லிடோ (யாழ்)**
தினசரி 4-00, 6-45, 9–30
சனி, ஞாயிறு, விடுமுறை நாட்களில்
10–30, 2-30, 6-30, 9-30
சிவாஜி, ரேவதி, சுரேஷ், மனோரமா, ஜெய்சங்கர், வை. ஜி. மகேந்திரன்
நடித்த
மருமகள்
அடுத்த வெளியீடு
மாவீரன்
(புதிய பிரதி)

**ஸ்ரீதர் - (யாழ்.)**
தினசரி 4.00, 7.00, 9.45
சனி, ஞாயிறு விசேஷ விடுமுறை நாட்களில்
4 காட்சிகள்
10.30, 2.30, 6.30, 9.30
ரஜனி, ராதிகா, ரகுவரன்
நடித்த
ஊர்க்காவலன்
50-வது நாளை நோக்கி
B/6


## ஊழியர் தாமத வருகையால் பொதுமக்கள் அசௌகரியம்

(கஞவாஞ்சிக்குடி)

இங்குள்ள அரசாங்க அலுவலகங்கள், வைத்தியசாலைகள், கூட்டுறவுச் சங்க கடைகள், ஆகியவற்றில் கடமை புரியும் ஊழியர்கள் கடந்த கால வன்செயல்களின் போது கடமைக்கு ஏதாவது சாட்டுக்களை மேலதிகாரிகளுக்குத் தெரிவித்து தாமதமாக வருவதை பழக்கப்படுத்திக் கொண்டனர். இதே பழக்கம் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வருவதால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். அத்தோடு இவர்கள் தங்கள் லீவுக்கு பதில் ஒழுங்குகள் மேற்கொள்ளாததால் மேலும் பல அசௌகரியங்களுக்குப் பொதுமக்கள் ஆளாகின்றனர். (45)

DSI கொன்சூமர் சேர்விஸ் சென்ரர்

(ஞானம்ஸ் ஸ்ரூடியோ அருகாமை)
281,C சி. பொன்னம்பலம் வீதி,
(மணிக்கூட்டு வீதி)
யாழ்ப் பாணம்.

நீண்டகாலப் பாவனைக்கு DSI தயாரிப்புகள்

(B 954)


## பிரார்த்தனைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மனிதத்துவத்தை வளர்ப்பதில் சமயங்களின் பங்கு என்னும் பொருள்பற்றி கம்பன் கழக அமைப்பாளர் இ. ஜெயராஜ், நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் 2ஆம் குறுக்குத்தெரு கிறிஸ்துநாதர் ஆலய மண்டபத்தில் (மறையகம்) உரை நிகழ்த்துவார்.

... தரவேண்டும். மக்களின் ஆதரவு முழுமையாக எங்களுக்குக் கிடைக்குமாக இருந்தால் எங்கள் உரிமைகளை எளிதில் பெறலாம். கடந்த காலங்களில் எமது மக்கள் எங்களுக்கு அளித்த ஆதரவினை நாங்கள் மறந்துவிடவில்லை. எல்லோரும் ஒரே அணியில் நின்று போராடினால் எமக்கு வெற்றி கிடைப்பது உறுதி. எங்களை யாரும் ஏமாற்ற முடியாது. ஏமாறவும் மாட்டோம். எங்களை ஏமாற்ற நினைப்பவர்களே ஏமாறுவார்கள் என்றார்.

## பொதுமக்கள் அசௌகரியம்

(களுவாஞ்சிக்குடி)

இங்குள்ள அரசாங்க அலுவலகங்கள், வைத்தியசாலைகள், கூட்டுறவுச் சங்க கடைகள், ஆகியவற்றில் கடமை புரியும் ஊழியர்கள் கடந்த கால வன்செயல்களின் போது கடமைக்கு ஏதாவது சாட்டுக்களை மேலதிகாரிகளுக்குத் தெரிவித்து தாமதமாக வருவதை பழக்கப்படுத்திக் கொண்டனர். இதே பழக்கம் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வருவதால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். அத்தோடு இவர்கள் தங்கள் லீவுக்கு பதில் ஒழுங்குகள் மேற்கொள்ளாததால் மேலும் பல அசௌகரியங்களுக்குப் பொதுமக்கள் ஆளாகின்றனர். (45)


சங்கானையில் நிதான விலையில் அரிவு வேலை

உங்கள் தேவைகள் அனைத்திற்கும் ஏற்ற வகையில்

பெரிய, சிறிய மரங்கள் அனைத்தும் குறித்த தவணையில் அரிந்து கொடுக்கப்படும்.

பலகை * தீராந்தி * றீப்பை * களிம்பு * புறவெட்டு * மாம்பலகை * பலாப்பலகை

விற்பனைக்கு உண்டு

மரங்கள் நிதான விலையில் ஏற்றுக்கொள்ளப்படும்

விநாயகர் அரிவு ஆலை

பிரதான வீதி, சங்கானை.

(B.968)

# A/L அசேதன இரசாயனம்

## S,p,d தொகுப்பு மூலகங்கள்

சத்தீஸ்

### ஆவர்த்தனப் போக்குகள்

ஆவர்த்தனத்தின் வழி உலோக இயல்பு குறைக்கப்பட்டு அலோக இயல்பு அதிகரிக்கும். இப்போக்கை அறிவதற்கு மூன்றாம் ஆவர்த்தன மூலகங்களை (Na → Cl வரை) உதாரணமாகக் கருதுவோம்.

**(1) குளோரைரயிட்டுகளின் இயல்புகளை ஆராய்தல்**

பொதுவாக உலோகக் குளோரைரயிட்டுகள் அயன் பிணைப்புகள், உருகுநிலை, கொதிநிலை கூடிய திண்மங்கள். நீரில் நீரேற்றப்பட்டுக் கரையும். நீர்ப்பகுப்படையாது. நீர்க்கரைசலில் PH=7 ஆக இருக்கும். (25°C)

ஆனால் அலோகங்களின் குளோரைரயிட்டுக்கள் பங்கீட்டுவலுப் பிணைப்புக்கள். தனி மூலக்கூறுகள். உருகுநிலை, கொதி நிலை குறைந்தனவ. நீரில் நீர்ப்பகுப்படையும். நீர்க்கரைசலில் PH<7 ஆக இருக்கும்.

இப்பொழுது 3ஆம் ஆவர்த்தன மூலகக் குளோரைரயிட்டுக்களைக் கருதுவோம்.

**3ஆம் ஆவர்த்தனக் குளோரைரயிட்டுக்கள்**

| சூத்திரம் | அமைப்பு | பிணைப்பு | நிலை |
|---|---|---|---|
| $NaCl$ | அயன் இராட்சதப்பளிங்கு | அயன் பிணைப்பு | உருகுநிலை கூடிய திண்மம் |
| $MgCl_2$ | அயன்இராட்சதப்பளிங்கு | அயன் பிணைப்பு | உருகுநிலை கூடிய திண்மம் |
| $AlCl_3$ | தனி மூலக்கூறு | பங்கீட்டுவலுப் பிணைப்பு | வெப்பத்துக்கு பதங்கமாகும் திண்மம் |
| $SiCl_4$ | தனி மூலக்கூறு | பங்கீட்டுவலுப் பிணைப்பு | ஆவிப்புறப்புள்ள திரவம் |
| $PCl_5$ | தனி மூலக்கூறு | பங்கீட்டுவலுப் பிணைப்பு | வாயு |
| $S_2Cl_2$ | தனி மூலக்கூறு | பங்கீட்டுவலுப் பிணைப்பு | ஆவிப்புறப்புள்ள திரவம் |
| $Cl_2$ | தனி மூலக்கூறு | பங்கீட்டுவலுப் பிணைப்பு | வாயு |

குறிப்பு: இம் மூலகங்கள் எல்லாவற்றிலும் குளோரீன் மின் எதிர் இயல்பு கூடியது. எனவே இம்மூலகங்களுடன் குளோரீன் ஆக்கும் பிணைப்புகள் அயன்தன்மை உள்ளவையாக அல்லது முனைவாக்கம் உள்ளவையாகக் காணப்படும். ஆவர்தனத்தில் ஊடாகச் செல்லும் போது (M—Cl) பிணைப்பின் மின் எதிர் இயல்பு வித்தியாசம் குறைந்து கொண்டு செல்வதால் அயன் தன்மை குறைக்கப்பட்டு பங்கீட்டுத்தன்மை அதிகரிக்கும், இதனால் அயன் இராட்சதப் பளிங்குகள் தனி மூலக்கூறுகளாக மாற்றப்படும். உருகுநிலை கூடிய திண்மங்கள் வாயுக்களாக மாற்றப்படும்.

### குளோரைரயிட்டுக்களின் நீர்த்தாக்கங்கள்

NaCl: அயன் இராட்சதப் பளிங்கு. நீரில் நீரேற்றப்பட்டுக் கரைந்து அயன்களாகக் காணப்படும்.

$$NaCl\ (s) + (H_2O) \rightarrow Na^{+}\ (aq) + Cl^{-}\ (aq)$$

# காஷ்மீர்பிரச்சினை; போரைதவிர்த்து பேச்சுக்கள் மூலம் தீர்வு காணலாம்

- பெனாஸிர்

(இஸ்லாமாபாத்)

காஷ்மீர் பிரச்சினை குறித்து பாகிஸ்தானுக்கும் இந்தியாவிற்கும் போர் வருவது தவிர்க்க முடியாதது ஒன்றல்ல. இரு நாடுகளும் பரஸ்பரம் பேசிபேச்சு வார்த்தை மூலம் அரசியல் தீர்வு கொண்டுவர வழி வகைகள் இருக்கின்றன என்றுபாகிஸ்தானின் பிரதமமந்திரிபெனாசிர் பூட்டோ கூறியிருக்கிறார்.

எட்டு இஸ்லாமிய நாடுகளில் சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு பாகிஸ்தான் திரும்பிய பெனாஸிர் பூட்டோ பத்திரிகையாளர் மகா நாட்டில் பேசும் போது இவ்வாறு குறிப்பிட்டார்.

பரஸ்பரம் பேச்சு வார்த்தை வாயிலாகத்தான் காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்று தான் சுற்றுப்பயணம் மேற்கொண்ட எல்லா நாடுகளுமே வலியுறுத்திக் கூறியிருப்பதாக அவர் கூறினார்.

அத்துடன் காஷ்மீர் தனி நாடாக போக வேண்டும் என்ற எண்ணம் தம்மிடம் துளியும் இல்லை என்றும் அவ்வாறு நடைபெற்றால் இந்தியத் துணைக் கண்டம் துண்டு துண்டு நாடாக பிரிந்து ஒன்றுக்கு ஒன்று முரண்பட்டு மோதும் நிலைக்கு வந்துவிடும் என்றும் அதைத் தாங்கள் விரும்பவில்லை என்றும், இந்தியா முழுமையான நாடாக இருப்பதையே தாம் விரும்புவதாகவும் பெனாஸிர் வலியுறுத்திக் கூறினார்.

அத்துடன் தமது சுற்றுப் பயணத்தின் முக்கிய நோக்கம் அரசியல் ஒத்துழைப்புத் தேடியே தவிர இராணுவ உதவி தேடி அல்ல என்றும் குறிப்பிட்டார்.

ஆனால் அதே வேளை பாகிஸ்தான் மேல் யார் ஆக்கிரமிப்புச் செய்தாலும் அரபு மற்றும் இஸ்லாமிய நாடுகள் தமக்கு ஆதரவு வழங்கும் என்றும் கூறினார்.

இதேவேளை இந்தியப் பிரதம மந்திரி வி.பி.சிங் பெனாஸிர் பூட்டோவின் இப்பயணம் பற்றி "இவர் இவ்வாறு பயணம் மேற்கொண்டது தமக்கு ராஜீய நோக்கில் வெற்றியையே அளித்திருக்கிறது" என்று குறிப்பிட்டார்.

அத்துடன் பாகிஸ்தானின் எல்லையில் இருந்து இந்தியப் படைகளை விலகுமாறு அமெரிக்கா கோரிய வேண்டுகோளையும் நிராகரித்து விட்டது.

## சுதந்திரப் பிரகடனத்தைக் கைவிட்டால் மூன்று வருடத்தில் குடியரசு அந்தஸ்து

-கொர்பசேவ்

(மொஸ்கோ)

லித்வேனியா தனது சுதந்திரப் பிரகடனத்தைப் வாபஸ் பெறுமானால் மூன்று வருடங்களில் அதற்கு குடியரசு உரிமையை வழங்க தாம் தயார் என்று ஜனாதிபதி கொர்பசேவ் கூறியிருக்கிறார்.

ஆனால் லித்வேனியா தாம் தமது பிரகடனத்தை வாபஸ் பெறப்போவதில்லை என்றும் தமக்கு ஆதரவு தேடி வெளி நாடுகளுக்கு தூது அனுப்பியுள்ளது.

அண்மையில் அன்தோனியாவில் லட்வியா, லித்வேனியா அரசுகள் கூடி தமது எதிர் காலம் பற்றி விவாதித்தன.

## மௌலவி பாருக் கொலை

## ஆளுநர்ஜக்மோகன்பொறுப்பு கட்சிகள் கண்டனம்

(டில்லி)

அரசாங்க சார்புக் கட்சிகளான இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும், இந்திய மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியும் காஷ்மீர் ஆளுநர் ஜக்மோகனைத் திருப்பி அழைக்கும்படி கடந்த புதனன்று இந்திய அரசாங்கத்தைக் கேட்டுள்ளன.

மரணச் சடங்கில் கலந்து கொண்ட முஸ்லிம் மக்களைச் சுட்டுக் கொன்றதற்குஜக்மோகனே பொறுப்பாளி என இரு கட்சிகளும் லோக்சபையில் தெரிவித்துள்ளன.

கோடைக் கால நகரமான ஸ்ரீநகரில், பிரசித்தரான மௌலவி பாரூக்கின் மரணச் சடங்கில் கலந்து கொண்ட அப்பாவிகளான முஸ்லிம் மக்களின் மீது பாதுகாப்புப்படை மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 47 பேர்கொல்லப்பட்டனர். 200க்கும் அதிகமானோர் காயப்பட்டனர். என்று அங்கிருந்த வரும் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன. காஷ்மீர் அரசாங்கத் தரப்புச் செய்தியின்படி துப்பாக்கிப் பிரயோகத்தில் 27 பேர்தான் கொல்லப்பட்டனராம் ஆனால், ஸ்ரீநகர் ஆஸ்பத்திரிச் செய்திகள் 80 பேர் கொல்லப்பட்டதாகவும், 300க்கு அதிகமானோர் காயப்பட்டதாகவும் தெரிவிக்கின்றன.

ஸ்ரீ நகரில் ஊரடங்குச் சட்டம் உடனடியாக அமுல்படுத்தப் பட்டதும், ஈமக்கிரிகைகளில் கலந்து கொள்ள வந்தவர்கள் கலைந்து போக மறுத்ததால்துப்பாக்கிப் பிரயோகம் மேற் கொள்ளப் பட்டது என்று அரசாங்க தரப்பில் சொல்லப்படுகிறது.

பாதுகாப்புப் படையினர் ஒரு ஆக்கிரமிப்புப் படை போல் காஷ்மீரில் நடந்து கொள்வதாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் இந்தர்ஜித் குப்தா புதனன்று தெரிவித்தார்.

ஜக்மோகன் ஜம்மு காஷ்மீர் மக்களை தேசியநீரோட்டத்திலிருந்து மேலும் விலக்கி வைத்து விட்டார் என்று போவாட் புளக்கைச் சேர்ந்த சித்தாபாஸ்சு தெரிவித்தார். ஜக்மோகனைப் பதவியிலிருந்து நிறுத்தும் படியும் புது டில்லியைக் கேட்டுக் கொண்டார்.

சிரேஷ்ட மதகுருவான மௌலவி பாரூக் கடந்த திங்களன்று இனந் தெரியாத துப்பாக்கி மனிதர்களால், அவரது வீட்டில் வைத்துச் சுட்டுக் கொல்லப் பட்டார். காஷ்மீரை இந்தியாவிலிருந்து பிரித்தெடுக்க முயற்சிக்கும் முஸ்லிம் தீவிரவாதிகள் தான் இக்கொலைக்குப் பொறுப்பு என்று அரசாங்கம் கருத்துத் தெரிவித்துள்ளது.

## சீனாமீது அமெரிக்கா அதிருப்தி

(வாஷிங்டன்)

சீனாவின் மனித உரிமைகள் மீறல் தொடர்பாக அமெரிக்கா அதிருப்தி கொண்டுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் கூறியிருக்கிறார்.

ஆனாலும் சீனாவுடன் தொடர்ந்தும் வர்த்தக தொடர்புகளை வளர்க்கப் போவதாக ஜோர்ஜ் புஷ் கூறினார்.

சீனாவுடனான வர்த்தக உறவுகளை பேணுவது சீன மக்களுக்கும் அமெரிக்காவுக்கும் நல்லது என தாம் கருதுவதாக அவர் குறிப்பிட்டார்.

## ஆஸ்பத்திரி ஊழியர்கள்

பிணைப்பு

குறிப்பு: இம் மூலகங்கள் எல்லாவற்றிலும் குளோரீன் மின் எதிர் இயல்பு கூடியது. எனவே இம்மூலகங்களுடன் குளோரீன் ஆக்கும் பிணைப்புகள் அயன் தன்மை உள்ளவையாக அல்லது முனைவாக்கம் உள்ளவையாகக் காணப்படும். ஆவர்த்தனத்தில் ஊடாகச் செல்லும் போது (M—Cl) பிணைப்பின் மின் எதிர் இயல்பு வித்தியாசம் குறைந்து கொண்டு செல்வதால் அயன் தன்மை குறைக்கப்பட்டு பங்கீட்டுத்தன்மை அதிகரிக்கும், இதனால் அயன் இராட்சதப் பளிங்குகள் தனி மூலக்கூறுகளாக மாற்றப்படும். உருகுநிலை கூடிய திண்மங்கள் வாயுக்களாக மாற்றப்படும்.

## குளோரையிட்டுக்களின் நீர்த்தாக்கங்கள்

$NaCl$ : அயன் இராட்சதப் பளிங்கு. நீரில் நீரேற்றப்பட்டுக் கரைந்து அயன்களாகக் காணப்படும்.

$$Na^{+}Cl^{-}(s) + (H_2O) \rightarrow Na^{+}(aq) + Cl^{-}(aq)$$

நீரில் நீர்ப்பகுப்படையாது, 25° C இல் நீர்க்கரைசலில் PH = 7

N.B. விளைவுக் கரைசலை ஆவியாக்கி உலர் குளோரையிட்டைப் பெறலாம்.

$MgCl_2$ : அயன் இராட்சதப் பளிங்கு நீரில் நீரேற்றப்பட்டுக் கரைந்து அயன்களாகக் காணப்படும். மிக அரிதாக நீர்ப்பகுப்படையும் PH<7 (கிட்டத்தட்ட 7)

$$Mg^{++}Cl_2^{--}(s) + (H_2O) \rightarrow Mg^{++}(aq) + 2Cl^{-}(aq).$$

$$MgCl_2 + H_2O \leftrightharpoons Mg(OH)Cl + HCl$$

$$\downarrow \Delta H$$

$$MgO + HCl$$

N.B. $MgCl_2$ (aq) ஐ ஆவியாக்கி உலர்குளோரையிட்டைப் பெறமுடியாது காரணம் நீர்ப்பகுப்பால் MgO விளைவாகும்.

$AlCl_3$ : பங்கீட்டு வலுப் பிணைப்பு. Al—Cl பிணைப்புக்கிடையே மின் எதிர் இயல்பு வித்தியாசம் உண்டு. எனவே நீரை வன்மையாகத் தாக்கி நீர்ப்பகுப்படையும். PH<7.

$$AlCl_3 + 3H_2O \rightleftharpoons Al(OH)_3 + 3HCl$$

N.B. (i) விளைவு அமிலமும் காரமும் ஆதலால் நீர்ப்பகுப்பு மீளும்.

(ii) விளைவுக் கரைசலை ஆவியாக்கி உலர் குளோரையிட்டைப் பெறமுடியாது. காரணம் நீர்ப்பகுப்பால் $Al_2O_3$ விளைவாக்கப்படும்

$$2Al(OH)_3 \xrightarrow{\Delta H} Al_2O_3 + 3H_2O.$$

$SiCl_4$ : பங்கீட்டு வலுப் பிணைப்பு குளோரீனின் மின் எதிர் இயல்பால் Siஇல் இலத்திரன் அடர்த்தி குறைக்கப்படும். எனவே நீரை வன்மையாகத் தாக்கி முற்றாக நீர்ப்பகுப்படையும். (விளைவு இரண்டும் அமிலம்) PH<7.

$$SiCl_4 + 4H_2O \rightarrow Si(OH)_4 + 4HCl$$

$$\downarrow -H_2O$$

$$\text{(சிலிசிக்கமிலம்) } H_2SiO_3 + H_2O$$

$PCl_5$, $PCl_3$ : பங்கீட்டு வலுப் பிணைப்பு. நீரை வன்மையாகத் தாக்கி முற்றாக நீர்ப்பகுப்படையும். PH < 7.

$$PCl_5 + 4H_2O \rightarrow H_3PO_4 + 5HCl$$

$$PCl_3 + 3H_2O \rightarrow H_3PO_3 + 3HCl.$$

$SCl_4$ : பங்கீட்டு வலுப் பிணைப்பு நீரில் முற்றாக நீர்ப்பகுப்படையும் (PH<7)

$$SCl_4 + 3H_2O \rightarrow H_2SO_3 + 4HCl.$$

$S_2Cl_2$ : $2S_2Cl_2 + 3H_2O \rightarrow H_2SO_3 + 4HCl + 3S$

$Cl_2$ : பங்கீட்டு வலுப்பிணைப்பு நீர்ப்பகுப்படைந்து அமிலக் கரைசலைக் கொ

$$Cl_2 + H_2O \rightarrow HOCl + HCl$$

### தொகுப்பு

ஆவர்த்தனத்தினூடாகச் செல்லும் போது குளோறையிட்டுக்களின்

(1) அயன் தன்மை குறைந்து பங்கீட்டுத்தன்மை அதிகரிக்கும்.
(2) அயன் இராட்சத சாலக அமைப்பு தனிமூலக்கூறாக மாற்றப்படும்.
(3) உருகுநிலை, கொதிநிலை கூடிய திண்மங்கள் வாயுக்களாக மாற்றப்படும்.
(4) நீர்ப்பகுப்பு வீதம் அதிகரிக்கும்.

எனவே ஆவர்த்தனத்தின் வழி அலோக இயல்பு கூட்டப்படும்.

(தொடரும்)

கள் மீறல் தொடர்பாக அமெரிக்கா அதிருப்தி கொண்டுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் கூறியிருக்கிறார்.

ஆனாலும் சீனாவுடன் தொடர்ந்தும் வர்த்தக தொடர்புகளை வளர்க்கப் போவதாக ஜோர்ஜ் புஷ் கூறினார்.

சீனாவுடனான வர்த்தக உறவுகளை பேணுவது சீன மக்களுக்கும் அமெரிக்காவுக்கும் நல்லது என தாம் கருதுவதாக அவர் குறிப்பிட்டார்.

கொண்ட முஸ்லிம் மக்களைச் சுட்டுக் கொன்றதற்குஜக்மோகனே பொறுப்பாளி என இரு கட்சிகளும் லோக்சபையில் தெரிவித்துள்ளன.

கோடைக் கால நகரமான ஸ்ரீநகரில், பிரசித்தரான மௌலவி பாரூக்கின் மரணச் சடங்கில் கலந்து கொண்ட அப்பாவிகளான முஸ்லிம் மக்களின் மீது பாதுகாப்புப்படை மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 47 பேர் கொல்லப்பட்டனர். 200க்கும் அதிகமானோர் 300க்கு காயப்பட்டதாகவும் தெரிவிக்கின்றன.

ஸ்ரீ நகரில் ஊரடங்குச் சட்டம் உடனடியாக அமுல்படுத்தப் பட்டதும், ஈமக்கிரிகைகளில் கலந்து கொள்ள வந்தவர்கள் கலைந்து போக மறுத்ததால் துப்பாக்கிப் பிரயோகம் மேற் கொள்ளப் பட்டது என்று அரசாங்க தரப்பில் சொல்லப்படுகிறது.

பாதுகாப்புப் படையினர் ஜக்மோகனைப் பதவியிலிருந்து நிறுத்தும் படியும் புதுடில்லியைக் கேட்டுக் கொண்டார்.

சிரேஷ்ட மதகுருவான மௌலவி பாரூக் கடந்த திங்களன்று இனந் தெரியாத துப்பாக்கி மனிதர்களால், அவரது வீட்டில் வைத்துச் சுட்டுக் கொல்லப் பட்டார். காஷ்மீரை இந்தியாவிலிருந்து பிரித்தெடுக்க முயற்சிக்கும் முஸ்லிம் தீவிரவாதிகள் தான் இக் கொலைக்குப் பொறுப்பு என்று அரசாங்கம் கருத்துத் தெரிவித்துள்ளது.

பாரதிய ஜனதாக் கட்சி மாத்திரம் ஜக்மோகனை ஆதரிக்கிறது.

ஜக்மோகன் ஒரு ஹிந்து. ஜனவரி நடுப்பகுதியில் இவர் காஷ்மீர் கவனராகப் பதவியேற்றார்.

ஜனதா தள கட்சியின் முக்கியஸ்தரான சந்திரசேகரும் ஜக்மோகனுக்கு எதிராகக் குரல் கொடுத்துள்ளார்.

ஆஸ்பத்திரி ஊழியர்கள்

# தூய்மையான, ஒழுங்கானதுமான சேவையைச் செய்யவேண்டும்

-குணம்

(பருத்தித்துறை)

''வைத்தியசாலைகளில் மக்களுக்குச் சிறந்த வைத்திய சேவைகள் வழங்கப்படவேண்டும் வைத்திய சேவைகளை மேற்கொள்ளும் ஊழியர்கள் தமது தூய்மையான முக்கியத்துவம்வாய்ந்த சேவைகளை ஒழுங்கை மேற்கொள்ளவேண்டும் வைத்தியசாலைகளில் நிர்வாகச் சீர்கேடுகள் ஒழுங்கீனங்கள் இடம்பெறுவதற்கு ஒரு போதும் இடமளிக்ககூடாது நோயாளர் நலன்புரிச் சங்கங்கள் நோயாளர்களின் நலன்களைப் பேணக்கூடிய முக்கிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்''

இவ்வாறு பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலை நோயாளர் நலன்புரிச் சங்க ஆலோசனைக் கூட்டத்தில் தலைமை தாங்கி உரையாற்றிய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி வடமராட்சிப் பொறுப்பாளர் திரு. குணம் குறிப்பிட்டார். புலோலி (மந்திகை) அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் மருத்துவக்குழு இணைப்பாளர் தமிழீழ விடுதலைப்புலிகள் மருத்துவக்குழு வடமராட்சிப் பொறுப்பாளர் உட்பட தமிழீழ விடுதலைப் புலிகளின் மருத்துவக்குழுப் பகுதியைச் சேர்ந்த பல உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். தொடர்ந்து உரையாற்றிய வடமராட்சி மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் திரு. குணம் குறிப்பிட்டதாவது;

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் பல்வேறு வகைப்பட்ட நிர்வாகச் சீர்கேடுகள், பற்றாக்குறைகள், சுகாதாரச் சீர்கேடுகள் நிலவுவதாகப் பொதுமக்கள் புகார் செய்து வருவது மிகக் கவலைக்குரியதாகும். இந் நிர்வாகசீர்கேடுகள் பற்றாக்குறைகள் சுகாதார சீர் கேடுகளை நீக்கசுகாதாரத்திணைக்களம், வைத்தியசாலை நிர்வாகம் ஆகியன வேண்டிய நடவடிக்கைகளைக் மேற்கொள்ள வேண்டும் வைத்தியசாலை அபிவிருத்திச் சபையும் இந்நடவடிக்கைகளைகண்காணித்துக் கொள்ளவேண்டும். வைத்தியசாலையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான முயற்சிகளைச் சிறப்பாக அபிவிருத்திச் சபை மேற்கொள்ள வேண்டும்.

இன்றைய நிலையிலே நோயாளர் நலன் புரிச் சங்கம் இயங்கவேண்டியது மிக முக்கியத்துவம் பெறுகின்றது. வைத்தியசாலைக்குச் சிகிச்சைபெற வரும் நோயாளர்களின் நலன்களைப் பேணி அவர்களுக்கு உதவுவதில் நோயாளர் நலன் புரிச் சங்கம் முன்னணியில் திகழவேண்டும். இதன் அடிப்படையிலேயே நோயாளர் நலன்புரிச் சங்கங்கள் மருத்துவக்குழுப் பகுதியால் அமைக்கப்பட்டு வருகின்றன. நோயாளர் நலன்புரிச் சங்கங்களின் செயற்பாடுகள் விரிவுபடுத்தப் பட்டு அபிவிருத்தி செய்யப் படும். நோயாளர் நலன்புரிச் சங்க உறுப்பினர்கள் பருத்தித் துறை அரசினர் வைத்தியசாலையில் நிலவும் நிர்வாகச்சீர் கேடுகள், பற்றாக் குறைகள், சுகாதாரச் சீர்கேடுகள், சில ஊழியர்களின் ஒழுங்கற்ற நடவடிக்கைகள் பற்றி மிகவிளக்கமாக எடுத்துக் கூறினர்.

(25)

## மாணவர் அபிவிருத்தி

(வந்தாறுமூலை)

மாவடி வேம்பு விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் மாணவர் அபிவிருத்தி பொதுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்ட தீர்மானப்படி தற்காலிக ஓலைக்கொட்டில் அமைத்தலும் அதற்கான செலவில் ஆயிரம் ரூபாய் ஆசிரியர்களிடம் இருந்தும் மிகுதிபெற்றோர்களிடம்இருந்தும் பெறுவதாக தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் புதிய நிருவாக சபையும் தெரிவு செய்யப்பட்டது. பின்வருவோர் நிருவாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர். அதிபர் எஸ். சிறீஸ்கந்தராஜா செயலாளர் திருமதி காசுபதி தேவகி பொருளாளர்: திரு பொ. சிவகுரு (ஆசிரியர்) உப செயலாளர் திருமதி குசலகுமாரி (ஆசிரியை).

மற்றும் ஏழுபேர் நிருவாக சபை உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

(29)

## சோவியத்தில் பொருளாதார முறை மாற்றம்

(மொஸ்கோ)

சோவியத் யூனியனின் பொருளாதார முறையை மாற்றி அமைக்கும் புதிய திட்டத்தை ஜனாதிபதி கொர்பசேவின் ஆலோசனைக் குழு அங்கீகரித்திருக்கிறது.

இந்த ஆலோசனைகள் பாராளுமன்றத்திற்கு அனுப்பப் பட்டு அங்கு விவாதிக்கப் படும்.

# குருக்களுக்கு ஒழுக்கக் கோவை மந்திரிக்கு மகஜர்

(கொழும்புத்துறை)

அனைத்து இந்து ஆலய சமய குருமாரது கல்வியறிவு வளர்ச்சிக்கும் ஊதிய நிர்ணயிப்புக்கும் இந்து கலாசார அமைச்சு உதவ முன்வர வேண்டுமென்று யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை இந்து கலாசார அமைச்சர் திரு. பி. பி. தேவராஜ் அவர்களை மகஜர் மூலம் கோரியுள்ளது.

இந்து ஆலய சமயகுருமாரின் நலன் கருதிச் சமஸ்கிருதப் பாடசாலையும் குருமார பயிற்சித்திட்டமும் உருவாக்கப்படுவதுடன் குருமார் ஒழுக்கக் கோவையொன்றும் வெளியிடப்பட வெண்டும் என அம் மகஜரில் கோரப் பட்டுள்ளது.

கடந்த காலங்களில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்ட அனர்த்தங்களினால் ஆலயங்கள் பாதிப்புற்றுள்ளமையால் ஒவ்வொரு இந்து ஆலயங்களில் பராமரிப்புக்காக மாதாந்தம் ஆயிரம் ரூபா உதவிப்பணமாக வழங்கப்படுவதுடன் மாவட்டங்கள் தோறும் இந்து சமய அறங்காவல் சபைகளை அமைக்க வேண்டுமென்று யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை வலியுறுத்தியுள்ளது.

(24

# ஒப்பந்தக்காரர் இன்மையால் அபிவிருத்தி வேலைகள்தாமதம்

(யாழ்ப்பாணம்)

போதிய ஒப்பந்த காரர்கள் முன்வராததமையாலும் எமது பிரதேசத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் பற்றாக்குறையாலும் யாழ் மாவட்டத்தில் அமைக்கப்படவிருக்கும் பத்து ஏர்க்களங்கள் (சூடடிப்பு நிலையங்கள்)ஸ்தம்பிதமான நிலையில் உள்ளது

விரைவில் பூர்த்தியாக்கப்படவேண்டிய இக்களங்களின் வேலைகள் ஓரிரு ஒப்பந்தக்காரர்களின் உதவியுடன் மிக மிக மந்தமாக நடைபெற்று வருகின்றது

சிறுநீர்ப்பாசன வேலைகளுக்கும் விவசாய வீதி புனரமைப்பு வேலைகளுக்கும் சூடடிப்பு கள வேலைகளுக்கும்என ஆசிய அபிவிருத்தி வங்கியால் இதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது இதற்கேற்ப யாழ் மாவட்டத்தில் விவசாய வீதி புனரமைப்பு வேலைகளும் சிறுநீர்ப்பாசன வேலையும் வெற்றிகரமாக நடைபெறும் அதேவேளைசூடடிப்பு களவேலைகளுக்கு தொழில்நுட்ப வல்லுநர்கள் பற்றாக்குறைவு காரணமாக இக்கள வேலைகள் ஸ்தம்பித்துப் போய் உள்ளது என யாழ் மாவட்ட விவசாய திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (லோ)

## ஆடு, கோழி அன்பளிப்பு

(கிளிநொச்சி)

வன்செயலால் கணவனை இழந்த 100 பேருக்கு பூநகரி அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் 500 நல்லின ஆடுகளையும் 2000 கோழிகளையும் வழங்கியது. கோழிகளுக்கு உரியஉணவும்வழங்கப்பட்டது

பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த குமுழமுனை, முழங்காவில், கரியாலைநாகபடுவான், வலைப்பாடு, ஆகிய கிராமங்களைச் சேர்ந்த கணவனை இழந்தவர்களுக்கே இவை வழங்கப்பட்டன. ஒரு குடும்பத்துக்கு தலா 5 நல்லின ஆடுகள் வீதமும், 20 கோழிக் குஞ்சுகள் வீதமும், 5 வீட்டுககு ஒரு ஆட்டுக்கடா வீதமும் வழங்கப்பட்டது. கோழிகளுடன் அதற்குத் தேவையான உணவுகளும் 5 மாத காலத்திற்கு வழங்கப்பட்டது. (49)

# காங்கேசன் உரக்களஞ்சியம் உடன் திருத்த வேண்டும்

(யாழ்ப்பாணம்)

கடந்த கால வன்செயல்களினால் சேதமடைந்த நிலையில் இருக்கும் காங்கேசன்துறைப் பசளைக் களஞ்சியம் திருத்தியமைக்கப்பட வேண்டியது தற்போது மிகமிக அவசியமாகின்றது.

வீதிப்போக்குவரத்து மூலம் இவ்வளவு காலமும் கொண்டுவரப்பட்ட இப்பசளை வகைகளால் முழுமையாக யாழ். மாவட்ட விவசாயிகளின் தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியாது இருந்தது. ஆனால் தற்போதைய அமைதியான சூழ்நிலையும் புகையிரத போக்குவரத்து காங்கேசன் துறைவரை சுமுகமாகமாக நடைபெறுவதும் பசளை வகைகளை ரயில்பெட்டிகளில் கொண்டுவந்து சேர்ப்பதற்கு மிகவும் சாதகமாக உள்ளது. ஆனால் காங்கேசன்துறையில் அமைந்துள்ள இந்தஉரக்களஞ்சியசாலை திருத்தி அமைக்கப்படாத காரணத்தால் தேவைக்கேற்ற உரத்தை எமது மக்களுக்கு வழங்க முடியாத நிலையில் உள்ளோம் என யாழ். மாவட்ட கமத்தொழில் திணைக்கள அதிகாரி ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

அதேவேளை அண்மையில் உரத்தின் விலை குறைக்கப்பட்டுள்ளது. பயிர்ச்செய்கையாளர்களையும் விவசாயிகளையும் ஊக்குவிக்கும் முகமாக இவ்விலைக்குறைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (லோ)

# உறக்கத்தில் இருந்த மனைவி மீது அசிற் வீச்சு

(யாழ்ப்பாணம்)

தனது மனைவி இரவு வீட்டில் நித்திரையாக இருந்த சமயம் கணவர் திட்டமிட்டு மனைவியின் முகத்தில் எரிதிரவம் (அசிட்) ஊற்றி தனது கோபத்தை தீர்த்துக் கொண்டார்,

கனகராணி ரவீந்திரன் என்ற இருபத்தொரு வயது மனைவி இரவு வேளையில் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த சமயம் மனைவியுடன் பகல் நடந்த தகராற்றை காரணமாக வைத்து கணவர் எரிதிரவத்தை தனது மனைவியின் முகத்தில் ஊற்றினார். இச்சமயம் மனைவியின் அருகில் படுத்திருந்த கணவர் இரவீந்திரனின் பெறாமகள் உமாபதி கைலாயநாதனும் முகத்தில் எரிதிரவ காயங்களுக்குள்ளானார்.

கிளிநொச்சி இராமநாதபுரத்தில் நடைபெற்ற இச்சம்பவத்தினைத் தொடர்ந்து திருமதி கனகராணியும் செல்வி உமாபதியும் யாழ். போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சையின் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (லோ)

## தொழிற் சங்கம் அமைக்க நடவடிக்கை

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகள் தொழிலாளர்களின்நன்மை கருதி தொழிற் சங்கங்களை அமைக்கும்பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட அரசியல் பொறுப்பாளர் கோபி, தொழிற் சங்கப் பொறுப்பாளர் வில்லீஸ் ஆகியோர் தொழிற் சங்கங்களை அமைக்கும்பணியில் ஈடுபட்டுள்ளனர். (49)

# இறுப்பிட்டிதுறையூடாக நயினாதீவுக்குபடகு சேவை

(புங்குடுதீவு)

அடுத்த மாதம் ஆரம்பமாகவிருக்கும் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவத்தை யொட்டி இம் முறை இறுப்பிட்டி துறைமுகத்திலிருந்து நயினாதீவிற்கான படகுச் சேவை நடைபெறவுள்ளது.

மேற்படி துறைமுகத்திலிருந்து நயினாதீவிற்கு செல்லவிருக்கும் யாத்திரிகர்களுக்கான குடிநீர்,சுகாதாரம் மற்றும் வெளிச்ச வசதிகளை இறுபிட்டி கலைவாணி சனசமூக நிலையத்தினரும் ஐங்கரன்சன சமூக நிலையத்தினரும் மேற்கொண்டு வருகின்றனர்.

அத்துடன் இ.போ.ச. தனியார்பஸ் சேவையும் ஒழுங்கான முறையில் நடாத்தப்படும் என தெரிகின்றது. இறுப்பிட்டி பிரதான வீதி செப்பனிடப்படுவதற்கான பொருட்கள் தற்போது பறிக்கப்பட்டிருப்பதனால் நயினாதீவு உற்சவத்திற்கு முன் இவ் வீதி செப்பனிடப்பட்டுவிடுமென இப்பகுதி மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

அநேக வருடங்களுக்குப் பின்னர் இறுப்பிட்டி துறையினூடாக நயினாதீவுக்கு மேக்கொள்ளப் படவிருக்கும் இப் படகுச்சேவை தொடர்ந்தும் நடை பெற வேண்டுமெனவும் மக்கள் எதிர் பார்க்கின்றனர். (22)

## அன்பளிப்பு

(ஈச்சமோட்டை)

நல்லூர் – ஆலங்கேணி எவரெடி விளையாட்டு கழகத்துக்கு சுற்றி வேலி அமைப்பதற்காக ரூபா 5000/- தொகையை அன்பளிப்பாக பூநகரிஅபிவிருத்தி கழக தலைவர் தி. இராசநாயகம் என்பவரினால் வழங்கப்பட்டுள்ளது இவ்வாறு வளர்ந்து வரும் அமைப்புகளை அபிவிரித்தி செய்ய உதவி வழங்கியதையிட்டு எவரெடி விளையாட்டு கழகத்தின் தலைவர் செல்வன் ச. நடராசலிங்கம் மேற்படி அமைப்புக்கு நன்றி தெரிவித்துள்ளார். (43)

# 10 கிராமத்தில் குடும்பத் திட்ட சங்கத்தின் நடவடிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இவ் வருடம் இலங்கை குடும்ப திட்ட சங்கத்தின் நடவடிக்கைகள் 10 கிராமங்களில் மேற் கொள்ளபடுமென மாவட்ட முகாமையாளர் திரு வி. ஜீவநாதன்தெரிவித்தார்.

அரசடி ம.வி. மண்டபத்தில் செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது

இம் மாவட்டத்தில் கடந்த கால அமைதியற்ற சூழ்நிலை காரணமாக வருடாந்த ஒதுக்கீடு ரூபா இரண்டரை லட்சம் நிதியில் ஒன்றே கால்லட்சம் திரும்பிவிட்டது,

இவ் வருடம் இரண்டரை லட்சம் ரூபா நிதி மூலம் 10 கிராமங்களில் எமது பணி மேற்கொள்ளப் படும்.

இக் கிராமங்களில் சுகாதாரம், குடும்பத்திட்டமிடல், சுயமுயற்சி போன்றதுறைகளில் பயிற்சியளிக்கப்படும்.

இத்தகைய பயிற்சிகள் மூலம் கிராமிய மக்களிடையே தலைமைத்துவம், சிந்தனை தெளிவு என்பன உருவாகும் என்றார் (37)

## பட்டதாரிகள் சங்கம்

(களுவாஞ்சிக்குடி)

பட்டதாரிகள் சங்க கூட்டம் மட்டக்களப்பில் திரு. எஸ் என். சவுந்தரநாயகம் தலைமையில் நடைபெற்றது. நிர்வாக சபை தெரிவு பின்வருமாறு இடம் பெற்றது.

தலைவர் திரு. எஸ். என். சவுந்தரநாயகம் செயலாளர் திரு. கார்த்திகேசு பொருளாளர் திரு. வி. பேரின்பம் உபதலைவர் திரு. கே. தியாகராஜா உப செயலாளர் திரு. என். துரையப்பா.

பட்டதாரித்தரத்திலுள்ள நியமனங்களுக்கு வழங்கப்படும் சம்பளம் சலுகைகள் என்பவற்றிலுள்ள வேறுபாடுகளைச் சுட்டிக்காட்டி, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மாகாண முதலமைச்சர்கள் ஜனாதிபதி ஆகியோருக்கு நீதி கேட்டு மகஜர்கள் அனுப்புவதென இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (45)

## பிடாரி அம்பாள் பொங்கல்

(யாழ்ப்பாணம்)

ஆண்டுதோறும் வெகு விமரிசையாக நிகழும் நயினாதீவு தெற்கு தில்லைவெளிப்பிடாரி அம்பாள் ஆலய வருடாந்த மகாகும்பமும் பொங்கல் விழாவும்எதிர்வரும் ஜூன் மாதம் எட்டாம்திகதிபூரணவிரததினமான வெள்ளிக்கிழமையன்று ஆரம்பமாகவுள்ளது.

## ஆசிரியர் வதிவிட சேவைக்கால பயிற்சி

(மட்டக்களப்பு)

கல்முனை கல்வி மாவட்ட பாடசாலைகளில் க.பொ.த. உயர்தர வகுப்புகளில் விஞ்ஞானம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான 5 நாட்கள் வதிவிட சேவைக்கால பயிற்சி வகுப்பு அண்மையில் நடைபெற்றது.

வட - கிழக்கு மாகாண சபையின் கல்வி அமைச்சு இதனை ஏற்பாடு செய்தது.

80 ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

இறுதி நாள் வைபவத்தில் கல்வி அமைச்சு செயலாளர் திரு ஈ. ஜே. சற்குணராஜா கலந்து கொண்டார்.

சாகிறா வித்தியாலயத்தில் இப்பயிற்சி நடைபெற்றது. (37)


வாகன உரிமையாளர்களே!

❋ உங்கள் சகலவிதமான வாகனங்களும் திறமையான முறையில் சுத்திகரிப்புச் செய்ய எங்களை நாடுங்கள்!

❋ சகலவிதமான மசகு எண்ணெய் எம்மிடம் விற்பனைக்கு உண்டு.

வைபவங்களுக்குத் தேவையான
❋ கதிரைகள், ❋ தகரப் பந்தல் வாடகைக்குக் கிடைக்கும்.

தேவை: உருக்குத் தளபாடங்கள் செய்வதில் அனுபவம் உள்ளவர்கள் உடன் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

❋ பரஸ்கோ என்ஜினியறிங் வேக்ஸ் ❋
பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(B. 959)


மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தேவை: உருக்குத் தளபாடங்கள் செய்வதில் அனுபவம் உள்ளவர்கள் உடன் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**பரஸ்கோ என்ஜினியறிங் வேக்ஸ்**

பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

(B. 959)

தமிழீழ விடுதலைப் புலிகள் தொழிலாளர்களின் நன்மை கருதி தொழிற் சங்கங்களை அமைக்கும்பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட அரசியல் பொறுப்பாளர் கோபி, தொழிற் சங்கப் பொறுப்பாளர் வில்லீஸ் ஆகியோர் தொழிற் சங்கங்களை அமைக்கும்பணியில் ஈடுபட்டுள்ளனர்.

(49)

என். துரையப்பா.

பட்டதாரித்தரத்திலுள்ள நியமனங்களுக்கு வழங்கப்படும் சம்பளம் சலுகைகள் என்பவற்றிலுள்ள வேறுபாடுகளைச் சுட்டிக்காட்டி, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மாகாண முதலமைச்சர்கள் ஜனாதிபதி ஆகியோருக்கு நீதி கேட்டு மகஜர்கள் அனுப்புவதென இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(45)

## பிடாரி அம்பாள் பொங்கல்

(யாழ்ப்பாணம்)

ஆண்டுதோறும் வெகு விமரிசையாக நிகழும் நயினாதீவு தெற்கு தில்லைவெளிப்பிடாரி அம்பாள் ஆலய வருடாந்த மகாகும்பமும் பொங்கல் விழாவும்எதிர்வரும் ஜூன் மாதம் எட்டாம்திகதிபூரணவிரததினமான வெள்ளிக்கிழமையன்று ஆரம்பமாகவுள்ளது.

வட - கிழக்கு மாகாண சபையின் கல்வி அமைச்சு இதனை ஏற்பாடு செய்தது; 80 ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

இறுதி நாள் வைபவத்தில் கல்வி அமைச்சு செயலாளர் திரு ஈ. ஜே. சற்குணராஜா கலந்து கொண்டார்.

சாகிறா வித்தியாலயத்தில் இப்பயிற்சி நடைபெற்றது.

(37)

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

வீரவேங்கை கப்டன் "அலன்" (ந. பாக்கியலிங்கம்)



தாயின் மடியில்
06 | 05 | 1962

தாயக மண்ணில்
26 | 05 | 1987

தமிழ் மண்ணுக்கு வல்வை தந்த தியாக வேங்கை கப்டன் "அலன்"

**நடனசிகாமணி பாக்கியலிங்கம் அவர்களுக்கு எமது அஞ்சலிகள்**

'அலன்' நின் பாதைதான். தமிழீழ மக்களிருக்கும் பாதை நாமும் புறப்படுகின்றோம்.

உன் அன்பர்கள்

வ. இ. நடனசிகாமணி இரத்தினேஸ்வரி குடும்பத்தினரும், சகோதரர்களும், நண்பர்களும்
அம்மன் கோவிலடி, வல்வெட்டித்துறை.

(R-303)

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



2 ஆவது லெப்.

## றம்போ சிவா (றம்போ)

(தங்கவடிவேல் சிவகுமாரன்)

| தாயின் மடியில்: | தமிழீழ மண் மீட்பிற்காக: |
| --- | --- |
| 25 - 11 - 68 | 26 - 05 - 87 |

உதய சூரியன் புதுறோட்,
வல்வெட்டித்துறை.

நண்பர்கள்,
குடும்பத்தினர்.

(R 302)

### சிந்தனைக்கு

ஓர் அரசியல்வாதி தான் சொல்வதைத் தானே ஒருபோதும் நம்பாததால், மற்றவர்கள் நம்பும்போது பெரிதும் வியப்படைகிறான்.

- சார்ல் தெ கோல்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 26 - 05 - 90
தொலைபேசி
ஆசிரிய பீடம்: 025-2839 நிர்வாக பீடம்: 2208
த. பெ. எண். 05

# தொடர்ந்துவரும் (அ)நியாயங்கள்

மலையகத் தமிழர்கள் விரும்பினால் வடக்கு கிழக்கு மாகாணங்களில் வந்து குடியேறி வாழலாம் என்று விடுதலைப் புலிகள் அழைப்பு விடுத்திருப்பது பற்றி அரசாங்கத்தின் நிலை என்ன?

அமைச்சரவைக் கூட்டத்தைத் தொடர்ந்து பத்திரிகையாளர்களுக்கு எடுத்துக்கூறும் வாராந்த பத்திரிகையாளர் கூட்டத்தில் நேற்று முன்தினம் மேற்கண்ட கேள்வி கேட்கப்பட்டது.

இக்கேள்விக்கு அமைச்சரவைப் பேச்சாளரும் பெருந்தோட்டத்துறை அமைச்சருமான ரஞ்சன் விஜேரத்தினா பதிலளித்தார்.

''இவர்கள் (மலையகத் தமிழர்கள்) எங்கே குடியேற வேண்டும் என்பதை அரசாங்கம்தான் தீர்மானிக்க வேண்டும். இதுபற்றித் தீர்மானிக்க வேறு எவருக்கும் அதிகாரமில்லை''

இதுதான் அமைச்சர் ரஞ்சன் அளித்த பதில்.

இந்த நாட்டில் வாழும் மக்கள் நாட்டில் எந்த இடத்திலும் எந்தப் பகுதியிலும் வாழ்வதற்கு உரிமையுண்டு என்று ஜனாதிபதி பிரேமதாசா மட்டுமல்ல இதற்குமுன் ஆட்சியிலிருந்த அதிஉத்தமர் ஜே. ஆர். ஜெயவர்த்தனாவும் இப்படி அடிக்கடி உபதேசம் செய்து வந்திருக்கிறார்.

இவர்கள் மட்டுமல்ல ஆட்சிபீடத்திலிருந்த ஐக்கிய தேசியக் கட்சியினரும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினரும்கூட இப்படித்தான் கூறி வந்திருக்கின்றனர்.

நாட்டின் எந்த இடத்திலும் சென்று குடியேறி வாழ்வதற்கு இந்த நாட்டு மக்களுக்கு உரிமையுண்டு என்று இவர்கள் குறிப்பிடும் மக்கள் சிங்கள மக்கள் மட்டுமே என்பது தெளிவு.

தமிழ்ப் பகுதிகளில் திட்டமிட்ட குடியேற்றங்கள் மூலம் தமிழ்மண் சிங்களவர்களால் அபகரிக்கப்படுகிறது என்று தமிழ் மக்கள் குரல் கொடுக்கும்போது நாட்டின் எந்தப் பகுதியிலும் இந்நாட்டு மக்கள் எந்தப் பகுதியிலும் குடியேறி வாழ்வதற்கு உரிமையுண்டு என்ற பதில் வரும்.

உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்காக எனக் கூறிக்கொண்டு டி. எஸ். சேனநாயகா திருக்கோணமலையில் அல்லை, கந்தளாய் திட்டத்தைக் கொண்டு வந்தார். மட்டக்களப்பு மாவட்டத்தில் இங்கினியாகல அம்பாறைத் திட்டத்தையும் அவரே கொண்டு வந்தார். மின்னேரியாத் திட்டமும் டி. எஸ். சேனநாயகாவினால்தான் கொண்டு வரப்பட்டது.

மின்னேரியாத் திட்டத்தில் தமிழர்கள் குடியேறி விவசாயம் செய்வதற்குக் குடியேற்றப்படவில்லை.

அல்லை கந்தளாய் திட்டத்திலும் இங்கினியாகல அம்பாறைத் திட்டத்திலும் சிங்களவர்களே பெருமளவில் குடியேற்றப்பட்டனர். தமிழர்களுக்கு மிகக் குறைவான இடங்களே கொடுக்கப்பட்டன.

1956 ஆம் ஆண்டில் சிங்களம் மட்டும் மசோதா கொண்டு வரப்பட்ட அன்றே தூண்டிவிடப்பட்ட ...

# முஸ்லிம் மக்களின் இறைமையும் தமிழீழ விடுதலைப் போராட்டமும்

தமிழீழ விடுதலைப் போராட்டம்பல்வேறுகொடூர ஒடுக்கு முறைகளை எதிர்கொண்டு வரலாற்றில் புதிய அத்தியாயத்தை உருவாக்கும் வகையில் வெற்றிகரமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது. எவ்வித ஒடுக்குமுறைகளுமற்ற ஒரு சமதர்மத் தமிழீழம் தான் தமிழ் - முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளுக்கு நிலையான தீர்வாக அமைய முடியும் என்பதனை இன்று தமிழ் பேசும் மக்கள் நன்றாக உணர்ந்துள்ளனர். இந்த அடிப்படையில் தமிழ் மக்கள் மட்டுமன்றி முஸ்லிம் மக்களும் தமிழீழ விடுதலைப் போராட்டத்துடன் தம்மை இணைத்து வருகின்றனர். தமிழ் பேசும் மக்களில் சிறுபான்மையினர் என்ற வகையில், சிறுபான்மையினருக்கு ஏற்படக்கூடிய பெரும்பான்மை இன ஆதிக்கம் குறித்த அச்சம் முஸ்லிம் மக்களில் சிலருக்கு ஏற்படக்கூடிய நிலைமைகளும் உண்டு என்பதனை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். முஸ்லிம்மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தி அவர்களைப் போராட்டத்துடன் முழுமையாக இணைக்கவேண்டிய பணி போராட்டத்தை நேசிப்பவர்கள் அனைவருக்கும் உண்டு. முஸ்லிம் மக்களுக்கு ஏற்படக்கூடிய அச்ச உணர்வினைப் போக்கி, விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் ஊடாக அவர்களை அமைப்பாக்கி போராட்டத்துடன் இணைக்கும் முயற்சியில் விடுதலைப் புலிகள் தீவிரமாக இறங்கியுள்ளனர்.

## அரச ஒடுக்குமுறைகளும் முஸ்லிம் மக்களும்

தமிழ் மக்களைப் போல் முஸ்லிம் மக்களும் கடந்த காலங்களில் ஸ்ரீலங்கா அரச ஒடுக்கு முறைகளை எதிர்நோக்கியிருந்ததோடு பல்வேறுவிதமான அரச ஒடுக்கு முறைகளை இன்றும் எதிர்நோக்குகின்றனர். முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கிய, எதிர்நோக்குகின்ற அரச ஒடுக்கு முறைகள் ஸ்ரீலங்கா அரசும் முஸ்லிம் மக்களின் நலன்களையும் பாதுகாப்பினையும் உறுதி செய்யப்போவதில்லை என்பதனைத் தெளிவுபடுத்துகின்றன. சிறுபான்மை இனங்களை விழுங்கிய வண்ணம் ...

சனத்தொகை வீதம் 1981 இல் 9.7 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. அம்பாறை மாவட்டத்திலும்முஸ்லிம்களின்வீதத்தினை விட சிங்களவர்களின் வீதம் கூடுதலாக அமையக்கூடிய விதத்தில் குடியேற்றங்கள் நடந்து வருகின்றன.

கல்லோயாக் குடியேற்றத் திட்டம் மூலம் அமைக்கப்பட்ட 44 சிங்களக் குடியேற்றக் கிராமங்களில் 38 இனைச் சிங்களவர்களுக்கு வழங்கியமை மூலம் முஸ்லிம் மக்களின் நிலங்கள் சிங்களமயப் படுத்தப்பட்டன. முஸ்லிம் மக்கள் காடுகளைத் திருத்தி, எத்தனையோ சிரமங்களுக்கு மத்தியில் அமைத்த வயல்கள் 1965 ஆம் ஆண்டு எவ்வித நஷ்டஈடும் இன்றி சீனிக் கூட்டுத்தாபனத்தால் சுவீகரிக்கப்பட்டன.

விவசாயக் குடியேற்றங்கள், புனிதநகர்த்திட்டம்.நிலஅபிவிருத்தித்திட்டம் போன்ற பல்வேறு போர்வைகளின் கீழ் முஸ்லிம் மக்களின் நிலங்கள் தொடர்ச்சியாகச் சிங்களமயப் படுத்தப்பட்டன. திட்டமிட்ட நிலப்பறிப்பு முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் முதன்மையான இடத்தை வகிக்கின்றது.

## இன அழிப்பு

சிங்கள இனவாதம் 1915 ஆம் ஆண்டு முஸ்லிம் மக்களுக்கு எதிரான தாக்குதல்களைக் கட்டவிழ்த்து விட்டது இலங்கை பெயரளவிலான சுதந்திரத்தை அடைந்த பின்னர் தமிழ் மக்கள் மட்டுமன்றி, முஸ்லிம் மக்களும் ஸ்ரீலங்கா அரசுகளின் இன அழிப்புகளுக்குப் பலியாகியுள்ளனர். இதுமட்டுமன்றி அரச ஆதரவுடன் மேற்கொள்ளப்பட்ட வன்முறைகளின் போதும் முஸ்லிம் மக்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். முஸ்லிம் மக்களுக்கு எதிரான வன்முறைகளிற் சிலவற்றைக் கீழே குறிப்பிடுகின்றோம்.

1. 1974ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 13 ஆம் திகதி மஹியங்கணையில் உள்ள பஸ்கரம எனும் முஸ்லிம் கிராமம் எரிக்கப்பட்டதுடன் அங்கிருந்த பள்ளிவாசலும் உடைக்கப்பட்டது.

2. 1976 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி ...

கண்டி மாவில்மடையிலுள்ள முஸ்லிம் புனித அடக்கற்தலம் தரைமட்டமாக்கப்பட்டது. இங்குள்ள பள்ளிவாசற் கட்டிடத்தில் பௌத்தக்கொடி ஏற்றப்பட்டதுடன் பள்ளிவாசலும் எரிக்கப்பட்டது.

7. இஸ்ரேலிய மொஸாட்டின் வருகையினை எதிர்த்து முஸ்லிம் மக்கள் போராட்டம் நடத்திய போது ஸ்ரீலங்கா அரசினால் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டனர்.

8. வடக்கு, கிழக்குப் பகுதிகளில் ஸ்ரீலங்கா இராணுவத்தின் இன ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு முஸ்லிம் மக்களும் பலியானார்கள்.

9. 1989ஆம் ஆண்டின் முற்பகுதியில் புத்தளம், ஆனைமடுவத்தொகுதியில் மணற்குண்டு என்ற இடத்தில் வசித்துவந்த முஸ்லிம் மக்களின் 193 வீடுகள் எரிக்கப்பட்டு, அம்மக்கள் தங்கள் சொந்த மண்ணிலிருந்து விரட்டியடிக்கப்பட்டனர்.

## ஏனைய ஒடுக்குமுறைகள்

கல்விவாய்ப்பு, வேலைவாய்ப்பு ஆகியவற்றில் முஸ்லிம் மக்கள் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளனர். பாலர் பாடசாலையிலிருந்து பல்கலைக்கழக மாணவர் வரை 2,70,797 முஸ்லிம் மாணவர்கள் கல்வி பயில்கையில் பல்கலைக்கழக முஸ்லிம் மாணவர் வீதம் 0.11% மட்டுமே எனக் கணிப்பீடு ஒன்று தெரிவிக்கிறது. ஸ்ரீலங்கா அரசுகளின் கல்விக்கொள்கை முஸ்லிம் மக்களை மோசமாகப் பாதிக்கிறது. என்பதனை இக்கணிப்பீடு வெளிப்படுத்துகிறது. வேலை வாய்ப்பினைப் பொறுத்தவரை, மொத்தச் சனத்தொகையில் 7.43 வீதமுடைய முஸ்லிம்கள் அரச வேலைவாய்ப்பில் 4 வீதத்தை மட்டும் பெற்றுக்கொள்ள, சனத்தொகையில் 74 வீதமுடைய சிங்களவர்கள் 83 வீதமான அரச வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளும் நிலைமை காணப்படுகிறது.

(தொடரும்)

# மயிலணி சைவ வித்தியாலய மெய்வல்லுநர் விழா

(காங்கேசன்துறை)

மயிலணி சைவ மகாவித்தியாலய பவள விழா ஆண்டு இல்ல மெய்வல்லுநர் விழா இன்று சனிக்கிழமை பி. ப. 2 மணியளவில் நடைபெறும்.

மருதனாமடம் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் இ. ச. குலசேகரம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

அதிபர் சு. துரைசிங்கம் தலைமை வகிக்கும் இவ்விழாவில் உடற்கல்வி அதிகாரி கே. நாகமணி, சுன்னாகம் சொத்தணி அதிபர் சே. இராஜவல்லவன் ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வர்.

# குண்டு வீச்சிலிருந்து பாதுகாப்பது எப்படி?

(முன்னைய தொடர்ச்சி)

## மூடிய அகழிகள்

இவ்வகை அகழிகள் ஒவ்வொரு குடும்பத்தினராலும் அமைக்கப்பட வேண்டியனவாகும். இவை செலவு குறைந்த நாளாந்தம் பாவனையிலுள்ள, இலகுவில் ...

# ஊர்சுற்றி

### எழுதுவது

இரண்டு தினங்களுக்கு முன்னர் ஒருநாள் அதாவது சுமார் ஒரு மணி நேரம் மட்டும் யாழ்.நகரில் மழைபெய்தது. ஒரு மணிநேரம் பெய்த மழையில் யாழ். நகரப் பிரதான பஸ்நிலையம் மிதக்கின்றதென்றால் பல மணிநேரம் அல்லது நாள் முழுவதுமே காற்றுடன் கடும் மழை பெய்தால் பஸ் நிலையம் மாயமாய் மறைந்தாலும் மறைந்துவிடுமோ?

பஸ் நிலையத்தை அடுத்து நவீன சந்தைக் கட்டிடத்துடனுள்ள வடிகால்வாய் நீர் வடிந்து செல்ல முடியாமல் அடைத்துக் கிடக்கின்றது.

சுறுசுறுப்புக்கும்வேலைகளை ஆர்வத்துடனும் அக்கறையுடனும் நேரம் காலம்பாராதுநிறைவேற்றுவதில்யாழ்.மாநகரசபை அதிகாரிகளும், ஊழியர்களும் பரிசு பெறத் தகுதியுடையவர்கள்!

கஸ்தூரியார் வீதி செப்பனிடப்பட்டுப்பலமாதங்களாகிவிட்டன. வீதி திருத்துவதற்குப் பறிக்கப்பட்ட கற்குவியல்கள் பல இன்னமும் அங்கேயே கிடக்கின்றன.

பிறவுண் வீதி செப்பனிடத் தொடங்கிக் கிட்டத்தட்ட ஒரு மாதமிருக்கும். இன்னமும் பாதி வீதி உழுதுவிட்ட நிலையிலேயே இருக்கின்றது.

நாவலர் வீதி திருத்துவதற்காகப்பறிக்கப்பட்ட கல்லும், மணலும் நடு வீதிக்கு வந்து 'கரைந்து' கொண்டிருப்பதுடன் சைக்கிள் ரயர்களையும் பாதசாரிகளின்கால்களையும் பதம் பார்க்கின்றன. விபத்துக்களும் ஏற்படுகின்றன.

யாழ். நகரில் பெருமாள் கோயிலுக்கு நாவலர் வீதியிலிருந்து செல்லும் ஸ்ரீ வெங்கடேசன் வீதி என்ற ஒழுங்கையில் மின்சாரப் பகுதியினருக்குத் திடீரென்று அக்கறை பிறந்திருக்கின்றது.

மின் கம்பியில் முட்டும் ...

என்று தமிழ் மக்கள் குரல் கொடுக்கும்போது நாட்டின் எந்தப் பகுதியிலும் இந்நாட்டு மக்கள் எந்தப் பகுதியிலும் குடியேறி வாழ்வதற்கு உரிமையுண்டு என்ற பதில் வரும்.

உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்காக எனக் கூறிக்கொண்டு டி.எஸ்.சேனநாயகா திருக்கோணமலையில் அல்லை, கந்தளாய் திட்டத்தைக் கொண்டு வந்தார். மட்டக்களப்பு மாவட்டத்தில் இங்கினியாகல அம்பாறைத் திட்டத்தையும் அவரே கொண்டு வந்தார். மின்னேரியாத் திட்டமும் டி. எஸ். சேனநாயகாவினால்தான் கொண்டு வரப்பட்டது.

மின்னேரியாத் திட்டத்தில் தமிழர்கள் குடியேறி விவசாயம் செய்வதற்குக் குடியேற்றப்படவில்லை.

அல்லை கந்தளாய் திட்டத்திலும் இங்கினியாகல அம்பாறைத் திட்டத்திலும் சிங்களவர்களே பெருமளவில் குடியேற்றப்பட்டனர். தமிழர்களுக்கு மிகக் குறைவான இடங்களே கொடுக்கப்பட்டன.

1956 ஆம் ஆண்டில் சிங்களம் மட்டும் மசோதா கொண்டு வரப்பட்ட அன்றே தூண்டிவிடப்பட்ட இனக்கலவரம் இங்கினியாகல அம்பாறையில் குடியேறி இருந்த தமிழ் மக்களை அங்கிருந்து விரட்டியடித்தது.

இதன்பின் 1958ஆம் ஆண்டில் ஏற்பட்ட இனக்கலவரம் அல்லை கந்தளாய் திட்டத்திலிருந்த தமிழர்களையும் விரட்டி அடித்தது.

1956 தொடக்கம் காலத்துக்குக்காலம் ஏற்பட்ட இனக்கலவரங்களில் குடிபெயர்ந்த சிங்களவர்கள் மீளக் குடியமர்த்தப்பட்டனர். மீளக் குடியமர்தல் என்ற பெயரில் புதிதாகவும் சிங்களவர்கள் திருக்கோணமலைமாவட்டத்தில் குடியமர்த்தப்பட்டிருக்கின்றனர். இனக்கலவரங்களினால் குடிபெயர்ந்த தமிழர்களை மீளக்குடியமர்த்துவதில் அரசாங்கம் என்றுமே அக்கறை காட்டியதில்லை.

மலையகத் தமிழ் தோட்டத் தொழிலாளர்களைப் பொறுத்தவரை ஒரு தோட்டத்திலிருந்து மற்றொரு தோட்டத்துக்குச் சென்று வாழ்வதுகூடப் பெரும் கஷ்டம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் புனானை என்ற இடத்தில் மலையகத்தைச் சேர்ந்த சில தமிழ்க் குடும்பங்கள் சில வருடங்களுக்கு முன்னர் குடியேறி காடுகளை அழித்து கழனியாக்கி விவசாயம் செய்யத் தொடங்கினர். அப்பகுதியிலிருந்து அவர்கள் விரட்டியடிக்கப்பட்டனர். இப்போது அங்கு சிங்களவர்கள் குடியேற்றப்பட்டு சிங்களக் கிராமமாக மாற்றப்பட்டு விட்டது. இங்கு இப்பொழுது நிரந்தரமாக ஒரு பொலிஸ் நிலையமே இருக்கிறது. மட்டக்களப்புக்குச் செல்லும் தமிழ் மக்கள் இங்கு பொலிஸ் சோதனைக்குள்ளான பின்னரே செல்ல முடியும்.

மலையகத் தமிழ்த் தோட்டத் தொழிலாளர் மலையகத்தில் தோட்டங்களில்தான் வாழ முடியும். இல்லையேல் அவர்கள் இந்தியாவுக்குத் திரும்பிச் செல்ல வேண்டும்.

இலங்கைப் பிரஜாவுரிமை பெற்ற மலையகத் தமிழர்கள்கூட இந்திய வம்சாவளியினர் என்பதால் மலையகத்துக்கு வெளியே சென்று குடியேறி வாழ முடியாது.

கால்நூற்றாண்டுக்கு முன்னர் செய்துகொண்ட ஏதோவொரு ஒப்பந்தத்தை வைத்து ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட மலையகத் தமிழ் மக்களை கட்டாயமாக நாடு கடத்துவதற்கு துடிக்கும் அரசாங்கம் மலையகத்தில் சிங்களவர்களுக்கு இருக்க நிலமில்லையென்றும் அவர்களுக்கு வேலை வாய்ப்பில்லையென்றும் கூறுகிறது.

மலையகத் தமிழர் வடக்கு கிழக்கு மாகாணங்களில் வந்து குடியேறினால் தமிழ் மக்கள் தொகை அதிகமாகிவிடுமென்பது சிங்கள பேரினவாதிகளின் அச்சம்.

தமிழ்ப் பகுதிகளில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களின் மூலம் தமிழ் மண்ணை அபகரித்து நாடு முழுவதையும் சிங்கள மயமாக்குவது இலங்கை சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து சிங்கள பௌத்த பேரினவாதிகள் மேற்கொண்டுவரும் திட்டமிட்ட செயல்.

இந்நிலையில் சகல மக்களையும் நீதியாகவும் நியாயமாகவும் நடத்துவதே அரசின் கொள்கை என்று அமைச்சர் ரஞ்சன் நேற்று முன்தினம் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் முன்னுக்குப்பின் முரணாகக் கூறியிருப்பது ஒன்றே எல்லாம் பம்மாத்து என்பதை எடுத்துக்காட்டுகிறதே!

### முஸ்லிம் மக்களும்

தமிழ் மக்களைப் போல் முஸ்லிம் மக்களும் கடந்த காலங்களில் ஸ்ரீலங்கா அரச ஒடுக்கு முறைகளை எதிர்நோக்கியிருந்ததோடு பல் வேறுவிதமான அரச ஒடுக்கு முறைகளை இன்றும் எதிர்நோக்குகின்றனர். முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கிய, எதிர்நோக்குகின்ற அரச ஒடுக்கு முறைகள் ஸ்ரீலங்கா அரசும் முஸ்லிம் மக்களின் நலன்களையும் பாதுகாப்பினையும் உறுதி செய்யப்போவதில்லை என்பதனைத் தெளிவுபடுத்துகின்றன. சிறுபான்மை இனங்களை விழுங்கிய வண்ணம் தன்னை வளர்த்து வந்த சிங்கள இனவாதம் எவ்வாறு முஸ்லிம் மக்களை விழுங்கியது என்பதனை வெளிப்படுத்த முஸ்லிம் மக்கள் எதிர்கொண்ட அரச ஒடுக்குமுறைகள் போதுமானவை.

### நிலப்பறிப்பு

முஸ்லிம் மக்களுடைய நிலங்களைப் பறிமுதல்செய்து அதில் சிங்களவர்களைக் குடியேற்றியதன் மூலமும், முஸ்லிம்கள் பெரும் பான்மையாக வாழ்ந்து வந்த பிரதேசங்களை சிங்களப் பெரும்பான்மைப் பிரதேசங்களுடன் இணைத்தமையின் மூலம் முஸ்லிம் மக்களை அவர்களின் சொந்த மண்ணில் சிறுபான்மையினராக்கும் சதியினை ஸ்ரீலங்கா அரசு வெற்றிகரமாகச் செய்து வருகின்றது. கிழக்கு மாகாணத்தில் 1946 ஆம் ஆண்டில் 39% மாக இருந்த முஸ்லிம் மக்கள் 1981 இல் 32.2% மாக வீழ்ச்சியடைந்துள்ளனர். புத்தளம் மாவட்டத்தின் முதற் குடிசனமதிப்பீட்டின்படி 36% மாக இருந்த முஸ்லிம்களின்

ளனர். இதுமட்டுமன்றி அரச ஆதரவுடன் மேற்கொள்ளப்பட்ட வன்முறைகளின் போதும் முஸ்லிம் மக்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். முஸ்லிம் மக்களுக்கு எதிரான வன்முறைகளிற் சிலவற்றைக் கீழே குறிப்பிடுகின்றோம்.

1. 1974ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 13 ஆம் திகதி மஹியங்கணையில் உள்ள பஸ்கரம எனும் முஸ்லிம் கிராமம் எரிக்கப்பட்டதுடன் அங்கிருந்த பள்ளிவாசலும் உடைக்கப்பட்டது.

2. 1976 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி புத்தளம் ஜும்மாப் பள்ளிவாசலில் ஏழு முஸ்லிம்கள் ஸ்ரீ லங்காப் பாதுகாப்புப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

3. 1980 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21 ஆம் திகதி கொழும்பு கொம்பனித்தெரு பள்ளிவாசலில் தொழுகை நடத்திய மொஹமட் ஹூசேன், ஜபார் ஆகிய இரு முஸ்லிம்கள் ஸ்ரீ லங்காப் பொலீசாரின் துப்பாக்கிப்பிரயோகத்தினால் கொல்லப்பட்டனர்.

4. 1982 ஆம் ஆண்டு சிங்கள இனவெறியரால் காலியிலும் அதனைச் சூழவுள்ள 15 கிராமங்களிலும் அரச ஆதரவுடன் மேற்கொள்ளப்பட்ட முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல்களில் முஸ்லிம் மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர்.

5. 1983 ஆம் ஆண்டு இனக் கலவரத்தின் போது தமிழ் மக்களுக்கெதிராக மட்டுமன்றி முஸ்லிம் மக்களுக்கெதிராகவும் தாக்குதல்கள் இடம் பெற்றிருந்தன.

6. 1983 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ஆம் திகதியன்று

இ. ச. குலசேகரம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்

கொள்வர்.

# நூலக ஊழியர்களுக்கு நேரம் தெரியாதோ?

ஆசிரியர்
ஈழநாதம்

சமூகத்தை முன்னேற்றுவதில் நூலகங்களின் பங்கு மிகமுக்கியமானது என்பது எல்லோருக்கும்தெரிந்த விடயமாகும். ஆனால் நாம் வாழும்

## மக்கள் மடல்

மாநகரசபைநூலகப் பகுதிக்கு இது என்றுதான் தெரியப் போகின்றதோ எமக்குப் புரியவில்லை.

காலை எட்டு முப்பது மணியளவில் திறக்கப்பட வேண்டிய இந்த நூலகங்கள் அப்படி திறக்கப்படுவது அபூர்வமாகவே உள்ளது. அதுமாத்திரமன்றி பூட்டும் நேரமோ மாலை நாலுமணியாகும் இதனால் மாநகர சபைக்குள் வாழும் எந்த ஒரு பாடசாலை மாணவனோ அலுவலக உத்தியோகத்தர்களோ இந்த நூலகங்களை பாவிக்க முடியாத நிலையில் உள்ளது மனம் வருந்தத்தக்கதாகும். இதனை யாழ்ப்பாண மாநகரசபை கவனத்தில் எடுத்துக் கொள்ளுமா?

எஸ். சிவகரன்
யாழ்ப்பாணம்.

# குண்டு வீச்சிலிருந்து பாதுகாப்பது எப்படி?

(முன்னைய தொடர்ச்சி)

### மூடிய அகழிகள்

இவ்வகை அகழிகள் ஒவ்வொரு குடும்பத்தினராலும் அமைக்கப்பட வேண்டியனவாகும். இவை செலவு குறைந்த நாளாந்தம் பாவனையிலுள்ள, இலகுவில் கிடைக்கக்கூடிய பொருட்களைக் கொண்டே அமைக்கக் கூடியவை. இவை திறந்த அகழிகளை விட சற்று ஆழமான பாதுகாப்பான அகழிகளாகும். பொதுவாக 10 அடி நீளமுள்ளதாகவும், 6 அடி ஆழமுள்ளதாகவும் இவற்றினை அமைக்கலாம். இவற்றின் மேற்புறம் நாலரை அடி அகலமானதாகவும், அடிப்புறம் சற்றே குறுகியதாக மூன்றரை அடி அகலமானதாகவும் இருப்பின் சுவர்கள் இடிவுற்று விழுவது தடுக்கப்படுகிறது. உட்சுவர்களை மேலும் பலமானதாக்கி சரிவுற்று விழுவதை தடைசெய்வதற்காக பலகைகள் கம்புகள் என்பன உட்சுவர்களுடன் இறுக்கமாக பொருத்தப்படலாம் தேவையாயின் இருக்கை வசதிகள் கூட செய்யப்படலாம்.

இவ்வகையான அகழியொன்றினை அமைப்பதற்காக இடமானது தெரிவு செய்யப்படும் போது அரச படையினருக்கு சந்தேகம் ஏற்படா வகையில் உங்களால் இலகுவில் செல்லக்கூடிய இடமாயும் தெரிவு செய்யப்படல் வேண்டும். உதாரணமாக கோழி, ஆடு, மாடு போன்ற வீட்டு வளர்ப்புப் பிராணிகளின் கொட்டில்களின் கீழே அகழிகளை அமைத்து மேலே பிராணிகளை வளர்க்கலாம். வைக்கோற் போர்களின் கீழோ குப்பை மேடுகளின் கீழோ, நீர்த்தொட்டிகளின் கீழோ, விறகு அடுக்கப்பட்டிருக்கும் இடத்தின் கீழோ கூட இவற்றினை அமைக்க முடியும். வீட்டினது வெளிமதிற் சுவரினது உட்புறம் பூ மரங்களின் இடையே அமைத்தலோ, மலசல கூடங்களின் அருகில் அமைத்தலோ கூட அரச படையினரின் பார்வையில் இருந்து தப்பக் கூடியதாய் இருக்கும். இயலுமாயின் உங்களது வீட்டுக் கிணறுகளினூடு இறங்கி ஒரு பக்கத்தைக் குடைந்து உட்செல்லக்கூடியவாறு அமைத்தல் சிரமமாய் இருப்பினும் அதுவும் சிறந்த ஒரு வழியாகும். சிலவேளைகளில் உங்களது வீட்டிற்கு மிக அருகில் ஏற்கனவே குண்டு போடப்பட்டு இடிவுற்ற நிலையிலோ அல்லது பாழடைந்த கவனிப்பாரற்ற நிலையிலோ கட்டிடங்கள் யாதாயினும் காணப்படின் அவ்விடிபாடுகளை அகற்றாது அதன் உட்புகுந்து வசதியான ஓரிடத்தில் நிலத்தின் கீழ் அமைத்தலும் அரச படையினருக்கு சந்தேகத்தை தராத ஒரு முறையாகும்.

இப்போதுள்ள சூழ்நிலையில் அரச படையினர் வீடுகளைச் சுற்றி வளைத்து ஒவ்வொரு வீடு வீடாக தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவது குறைந்தே காணப்படுகிறது. அவர்களுக்கு தாம் தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் விடுதலைப் புலிகளினால் ஆபத்து ஏற்படலாம் என்ற எண்ணத்தினால் ஏற்பட்ட பயத்தின் காரணமாக பெரியளவு எண்ணிக்கையுடன் வந்து சந்தேகத்திற்கிடமான ஒரு சில இடங்களில் திடீரென சோதனை செய்து விரைவில் வெளியேறி விடுகிறார்கள். இருப்பினும் உங்களுடைய அகழிகள் தற்செயலாய் அவர்களால் கண்டு பிடிக்கப்படின் அதற்குரிய காரணங்களோ, சோடிக்கப்பட்ட உண்மையெனத் தோன்றும் கட்டுக்கதைகளோ தயாராக இருக்க வேண்டும்.

(தொடரும்)

கொண்டிருப்பதுடன் சைக்கிள் ரயர்களையும் பாதசாரிகளின்கால்களையும் பதம் பார்க்கின்றன. விபத்துக்களும் ஏற்படுகின்றன.

யாழ். நகரில் பெருமாள் கோயிலுக்கு நாவலர் வீதியிலிருந்து செல்லும் ஸ்ரீ வெங்கடேசன் வீதி என்ற ஒழுங்கையில் மின்சாரப் பகுதியினருக்குத் திடீரென்று அக்கறை பிறந்திருக்கின்றது.

மின் கம்பியில் முட்டும் மரக் கிளைகள், கதிகால்களை கிலர் வந்து மடமடவென்று வெட்டினர் மரம் தடிகளை வெட்டியது மட்டுமல்ல பூமரங்களையும்கண்டபடிவெட்டியபடியே 'உங்களுக்கு எல்லாம் பூ மரங்கள், குறோட்டன்கள், இதெல்லாம்உங்களுக்குத்தேவைதானோ' என்றுகாடைத்தனமாகப் 'போதனை' செய்தபடியே வெட்டித் தள்ளினார்கள். ஒரு வீட்டுவேலி மீது ஏணியைச் சாத்தி வைத்துப் பாதி வேலியைப் பிரித்து விட்டார்கள். அப்பொழுதும் அவர்கள் சண்டித்தன முறையிலேயே நடந்து கொண்டனர். பிற்பகல் இரண்டு மணியளவில் வீட்டில் ஆண்கள் எவருமேயில்லாத சமயத்தில்பெண்கள்இந்தநட்டா முட்டித்தனத்தை தட்டிக்கேட்கமுடியுமா? இவர்களை மேற்பார்வை செய்யவந்தவர் அப்பாவி வாய்மூடி மௌனியாக நின்றார்.

கிடுகு விற்கும் விலையில் இனி அந்த வேலியை எப்படிஅடைப்பதுஎன்று ஏங்கிக் கொண்டிருக்கிறது அந்தக் கஷ்டப்பட்ட குடும்பம்!

மின்கம்பிக்குப் போகும் மரக் கிளைகளாகத்தான் வெட்ட வேண்டும். நல்ல குழைகளாக இருந்தால் கொப்புகள் எங்கே போனாலென்னவெட்டிதள்ளி விடவேண்டும். பின்னால் குழைகளை எடுப்பதற்கு ஆள் வந்து கொண்டேயிருக்கும்!

இதுதான் மக்கள் சேவை!

Registered as a News Paper at the G. P. O

ஈழநாதம்



## பகல் காட்சி இல்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பிலும் பகல் 10 30 காட்சி பாடசாலை நாட்களில் காண்பிக்கப்படுவதில்லை.

பாடசாலை மாணவர் 10 30 காட்சிக்குச் செல்வதை தமிழீழ விடுதலைப் புலிகள் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

மாணவர்கள் 10.30 காட்சிக்கு வருவதை தடுப்பதற்காகவே இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தியேட்டர் நிர்வாகிகள் தெரிவித்தனர். (37)

## கணவனை இழந்தோருக்கு தையல் இயந்திரம்

(தம்புலுவில்)

அக்கரைப்பற்றுத் தென்பகுதியில் சட்ட விரோதமாக மது விற்பவர்களைத் தடை செய்வதன் மூலம் பெறப்படும் அபராதப் பணத்தைக் கொண்டு ஆதரவற்ற கணவனை இழந்த பெண்களுக்கு தையல் மெஷின்களை வாங்கி கொடுக்கும் ஏற்பாடுகளை இப்பகுதி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் செய்து வருகின்றனர்.

# கிராம சேவகர்கள் மீது குற்றம் சுமத்துவது எமது நோக்கமல்ல

-டொமினிக்

(யாழ்ப்பாணம்)

தனிப்பட்டவர்கள் மீது குறை காணவோ, அன்றி வீண்பழி சுமத்தவோ நாம் முற்படவில்லை எமக்குக் கிடைத்த பெருந்தொகையான புகார்களின் அடிப்படையிலேயே சில கிராம சேவகர்களின் தவறுகளைப் பொதுப்படையாகவே நாம் சுட்டிக் காட்டினோம். கிராம சேவகர்களைக் குற்றம் சுமத்துவது எமது நோக்கமல்ல. இவ்வாறு யாழ்.மக்கள் முன்னணி அரசியற் பொறுப்பாளர் திரு. டொமினிக் தெரிவித்தார்.

நேற்று மாலை மனோகரா திரையரங்கில் நடைபெற்ற கிராம சேவையாளர்களின் கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர்

மக்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருப்பவர்கள் கிராம சேவையாளர்களே மக்களை நன்கு புரிந்துகொண்டு அவர்களுக்குச் சேவையாற்ற வேண்டிய பொறுப்பு உங்களையே சாரும், மனச்சாட்சிக்குக் கட்டுப்பட்டு அதன் வழிகாட்டலிலேயே நீங்கள் சரிவரக் கடமை புரிந்தால் எவ்வித பிரச்சினைகளுக்கும் இடமிருக்காது. அத்துடன் சுயநலப் போக்கு முற்று முழுதாகத் தவிர்க்கப்படவேண்டும்.

உணவு முத்திரை நிவாரணம் வழங்கும்போது குறிப்பிட்ட அக்குடும்பத்தின் வருமானமே தீர்மானமாக இருக்க வேண்டும். வெளிநாடுகளில் உறவினர் இருந்தும் அவர்களின் உதவி பெறாத குடும்பத்தவர்களுக்கும் உணவு முத்திரை வழங்குவதில் தவறில்லை. அவர்களின் குடும்ப நிலை விபரங்கள் அறியும் போது எமது அவ்வப்பிரதேசப் பொறுப்பாளர்களின் உதவியையும் நாடலாம் என்றார்

இக்கூட்டத்தில் பல கிராம சேவையாளர்களின் பிரச்சினைகளும், அவற்றிற்கான தீர்வுகள் பற்றியும் ஆராயப்பட்டது. (மு)

## ஊழி[illegible]யை குறைக்க அரசாங்கம் ஆராய்கின்றது

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களின் வருடாந்த விடுமுறை தினங்களைக் குறைப்பது குறித்து அரசு ஆராய்ந்து வருகிறது.

பலபிரிவுகளில் இருந்து அரசாங்கத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட சிபார்சுகளுக்கு இணங்கவே அரச ஊழியர்களின் விடுமுறைத் தினங்களைக் குறைப்பதுகுறித்துஆராய்ந்து வருகிறது.

இதன்படி அரசாங்க ஊழியர்களுக்கான வருடாந்த விடுமுறை நாட்களின் எண்ணிக்கை 45இல் இருந்து 30 ஆகக் குறையலாம் என்று அரசாங்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

அவ்வாறே அரசாங்க ஊழியர்களின் வருடாந்த வேலை நாட்களின் எண்ணிக்கை 186 இலிருந்து 216ஆக அதிகரிக்கப்படும்.

இந்த விடுமுறை மாற்றங்களின் பின்னர் அரசாங்க ஊழியர்களின் விடுமுறை நாட்கள் வருடாந்த விடுமுறை வைத்திய விடுமுறை எனப் பிரிக்கப்படமாட்டாது.

இவை பொதுவான விடுமுறையாகவே கணிக்கப்படும். இது தொடர்பான திட்டம் ஒன்றும் தயாரிக்கப்படும்.

## பேராசிரியர் ரிஸ்ப்செரிப் பேருரை

(யாழ்ப்பாணம்)

யாழ். பெரியாஸ்பத்திரியில் உள்ள தாதிப்பயிற்சி நிலைய மண்டபத்தில் இன்று கொழும்பு மருத்துவப்பீடப் பேராசிரியர் ரிஸ்ப் செரிப் அவர்களது பேருரை நடைபெறும். இவர் ''சிறுநீரக நோய்களுக்கு புதிய அணுகுமுறை'' என்ற விடயத்தில் மாலை 3.30மணிக்கு பேருரை நிகழ்த்துவார்.

பேராசிரியர் ரிஸ்ப் செரிப் அவர்கள் இலங்கையிலே சிறந்த சிறுநீரக மாற்றுச் சிகிச்சை நிபுணராக விளங்குகின்றார். இவர் முதன்முதலில் கொழும்பில் பல மாற்றுச்சிகிச்சையினைச் செய்தவர் என்பது குறிப்பிடத்தக்கது

## ஆசிரியர்களுக்கு 6 மாதச் சம்பள முற்பணம்

(முல்லைத்தீவு)

முல்லை மாவட்டத்தில் ஆசிரியர்களுக்கு இடர் உதவிக் கடனாக ஆறு மாதச் சம்பள முற்பணம் வழங்கப்பட்டு வருகிறது. இதற்கான ஒழுங்குகளை முல்லைத்தீவு பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ். எஸ். மனோகரன் செய்துள்ளார்.

இதே வேளை இருவருட சம்பள முற்பணத்துக்கான விண்ணப்பங்கள் நிரல்படுத்தப்பட்டு, மாதத்துக்குப் பத்து பேர்களுக்கு முல்லைத் தீவுத்திணைக்களத்தால் வழங்கப்பட்டு வருகின்றது.

## கோட்டக்கல்வி அலுவலகத்தில் இணைப்பு அலுவலகங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டப்பாடசாலைகளில் வாழ்க்கைத்திறன் கல்வித்திட்டத்தை சிறந்த முறையில் நடைமுறைப்படுத்த உதவுமுகமாக யாழ் மாவட்டக் காரியாலயத்தில் இணைப்பு அலுவலர்களும் கோட்டைக்கல்வி அலுவலகங்களில் உதவி இணைப்பு அலுவலர்களும் நியமனம் செய்யப்பட உள்ளனர்.

அவர்களின் பெயர், விபரங்களைகல்வித்திணைக்களம் மாகாண கல்வி அமைச்சுக்கு சிபாரிசு செய்துள்ளதாகவும் அவர்களுக்கான நியமனங்கள் விரைவில் வழங்கப்படும் எனவும் தெரிவித்துள்ளது.

## நாடுகடத்தும்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தனைகள் நடத்தினார்களே தவிர உரிமைகளுக்காகப்போராடியதில்லை.

இன்று உரிமைகளுக்காக போராடும் மக்களை இவர்கள் காட்டிக் கொடுக்கின்றார்கள்,

சிங்கள அரசு தமிழ்பேசும் மக்களை இலங்கைத் தமிழர்கள், இந்தியத் தமிழர்கள், முஸ்லீம்கள் எனப் பிரித்தாள முயல்கின்றது. அதேபோல் மலையகம் வாழ் தமிழ் மக்களின் தலைவர்கள் எனச்சொல்லிக் கொள்பவர்கள் தமது சுயநலனுக்காக இத் தீவில் வாழும் தமிழர்களை இலங்கைத் தமிழர், மலையகத்தமிழர் எனப் பிரித்துப் பேசுவதையும் பார்க்கின்றோம்.

இத்தீவில் வாழும் தமிழர்களை அரசும், அரச கூலிகளும் பிரித்துப் பார்த்தாலும் எம்மைப் பொறுத்தவரை அவர்கள் தமிழர்கள். தமிழர்களை யாரும் பிரிக்க முடியாது எந்தத்தமிழ்பேசும் ஒருவனையும் அரசு ஒடுக்குவதையோ, கொலை செய்வதையோ நாம் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

**கடவுச் சீட்டுப்பெற நேர்ந்த சூழ்நிலை**

இன்று சிங்கள அரசு மலையகம் வாழ் தமிழ் மக்கள் மீது அடக்கு முறையை கட்டவிழ்த்து விட்டுள்ளது நாடு கடத்த முனைந்துள்ளது,

மலையகம் வாழ் தமிழ்மக்கள் இனப் படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டு இந்தியா செல்ல நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

அந்தச் சூழலில் ஒரு பகுதியினர் இந்திய கடவுச்சீட்டை பெற்றிருக்கலாம்.

இன்று அக் கடவுச்சீட்டை பெற்றவர்களோடு, அவர்களது பிள்ளைகளையும் நாடு கடத்த முயல்கின்றது சிங்கள இனவாத அரசு,

இவர்கள் எல்லோரும் இத்தீவின் குடிமக்கள்.

பிரச்சினைக்குரிய மக்களை கலந்துபேசாது செய்த-இன்று செத்துப்போன ஒப்பந்தங்களுக்கு மீள உயிர் கொடுக்க வேண்டிய தேவை இல்லை.

இன்று நாம் கேட்பதெல்லாம் இம்மக்களை நாடு கடத்தக்கூடாது என்பதுதான்.

எம்மைப் பொறுத்தவரை தமிழ் நாடும், தமிழக முதல்வரும் இவர்களுக்கு சிறிலங்கா அரசு குடியுரிமை வழங்கவேண்டும் எனக் கேட்டுக்கொள்ள வேண்டும், இவர்களை நாடு கடத்தும் முயற்சிக்கு ஆதரவு தரவும் கூடாது.

## போலி பாஸ்போட்காரர் கட்டுநாயக்காவில் கைது

(கொழும்பு)

போலி பாஸ்போட்டுகளை பயன்படுத்திவெளிநாடுசெல்ல முற்பட்ட பதினான்கு பேர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் பத்துப்பேர் வடபகுதியைச் சேர்ந்தவர்கள் ஆவார். ஏனையவர்கள் நீர்கொழும்பைச் சேர்ந்தவர்கள்.

இவர்கள் அனைவரும் கட்டுநாயக்கா பொலிசாரினால் நீர்கொழும்பு மாஜிஸ்ரேட் என். மகேந்திரராஜா முன்னிலையில் நிறுத்தப்பட்டனர்.

பின்னர் இவர்கள் 1500 ரூபா அபராதம் நீதிமன்றத்திற்கு கட்டினர்.

## கல்வி அதிகாரிகள், அதிபர்கள் செயற்பாடுகள் பற்றி மதிப்பீடு

(மட்டக்களப்பு)

கல்வி அதிகாரிகள், கொத்தணி அதிபர்களின் செயல்பாடுகள் மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றன. இம்மதிப்பீடு அறிக்கையின் அடிப்படையில்தான் இனிமேல் பதவி உயர்வு வழங்கப்படும். எந்தவொரு நடவடிக்கைகளுக்கும் சட்டதிட்டத்திற்கு புறம்பாக நடைபெற என்னால் அனுமதிக்க முடியாது.

இவ்வாறு வட-கிழக்கு மாகாண கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சு செயலாளர் திரு. இ. ஜே. சற்குண

மாகாண கல்வி அமைச்சு எடுக்கும் தீர்மானத்திற்கு சகலரும் இணைந்து செயற்பட வேண்டுமென மாவட்ட கல்விப் பணிப்பாளர்கள் மகாநாட்டில் முடிவு செய்துள்ளோம்.

இடமாற்ற சபையின் தீர்மானம் மீறக் கூடாது என ஆசிரியர்களிடம் கூறுங்கள். மத்திய அரசின் இடமாற்ற கட்டளைகளை கொண்டுவர வேண்டாம்என்றும் கூறுங்கள்'

அப்படியானால் மாகாண சபை இருந்து என்ன பயன்?

தனிநபர் சிறப்பு பெற சிறப்பு பெறவேண்டுமா? என சிந்தித்து பார்க்க வேண்டும்.

அதிகாரங்களை நான் வைத்திருக்க விரும்பவில்லை. மாவட்ட கல்விப்பணிப்பாளர்களுக்கும் சகல அதிகாரங்களும் வழங்கிவிட்டேன். என்றார்.

மட்/மாவட்ட கல்விப்பணிப்பாளர் திரு. கு. சோமசுந்தரம், திருமலை மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. கே. கே. தியாகராசா உட்பட கோட்டக் கல்வி அதிகாரிகளும், இ.த.ஆ. சங்க கிளை பிரமுகர்களும் உரையாற்றினர். (37)

## பொலிஸ்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

றாகலை போன்ற இடங்களில் பயிற்சி வழங்கப்படலாம்

தமிழ்மொழி மூல விரிவுரையாளர்கள் பதவிக்கான விண்ணப்பம் சப்இன்ஸ்பெக்டர், இன்ஸ்பெக்டர் தரங்களிலுள்ளவர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளது என்றார்.

அதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் 1200 பேர் அண்மையில் நடைபெற்ற

## கொத்தணி

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

முகாமைத்துவ அனுபவம் உள்ளவர்கள் இலங்கையில் குறைவாக உள்ள காரணத்தால்தனியார்துறையைபெருந்தோட்டத்தில் தான் தற்சமயம் அனுமதிக்கப் போவ

## குடிநீருக்கு காசு கொடுக்கவே வேண்டும்

(தீவுப்பகுதி)

தீவுப்பகுதி மக்களுக்கு இல

போலி, பாஸ்போட்டுகளை பயன்படுத்திவெளிநாடுசெல்ல முற்பட்ட பதினான்கு பேர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் பத்துப்பேர் வடபகுதியைச் சேர்ந்தவர்கள் ஆவார். ஏனையவர்கள் நீர்

## குடிநீருக்கு காசு கொடுக்கவே வேண்டும்

(தீவுப்பகுதி)

தீவுப்பகுதி மக்களுக்கு இலவசமாக குடிநீர் வழங்கப்படமாட்டாது. தொடர்ந்து இம்மக்கள் பணம் கொடுததே குடிநீரைப் பெற வேண்டுமெனவும், குடிநீருக்கு அதிக பணம் அறவிடப்படாமல் நீர் வழங்கும் செலவிற்காக மட்டும் சிறு தொகைப்பணம் பெறலாமெனவும் யாழ். மாவட்ட உள்ளூராட்சிஉதவி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

தீவுப்பகுதி மக்களுக்கு வேலணையில் இருந்தே நன்நீர் பவுசர் வண்டிகள் மூலம் எடுத்துச் செல்லப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றது. சில தனிப்பட்ட நபர்கள் வேலணையில் இருந்து குடிநீரை பவுசர்களில் ஏற்றி கூடுதல் விலைக்கு விற்பனை செய்து வருவதாகவும் புகார்கள் தெரிவிக்கப்படுகின்றது. (15)

---

**மா, பாண்**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாக அமுலுக்கு வருகிறது.

ஒரு கிலோ அரிசியின்யின் விலை ஒரு ரூபாய் ஐம்பது குறைக்கப்பட்டிருக்கிறது.சீனியின் விலையிலும் கிலோவுக்கு ஒரு ரூபாய் குறைக்கப்பட்டிருக்கிறது.

இதேசமயம் கோதுமை மாவின்விலையும் பாணின் விலையும் அதிகரிக்கப் பட்டிருக்கிறது.

---

**சகல**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கல்வி அமைச்சு முடிவு செய்திருக்கிறது,

இந்த உணவு முத்திரை மூலம் தாம் விரும்பிய உணவுப் பொருட்களை பாடசாலைக்குள் வாங்குவதற்கு வசதியாகவே பாடசாலைகளில் கூட்டுறவுக் கடைகள் அமைக்கப்படவுள்ளன,

இவர்கள் அனைவரும் கட்டுநாயக்கா பொலிசாரினால் நீர்கொழும்பு மாஜிஸ்ரேட் என். மகேந்திரராஜா முன்னிலையில் நிறுத்தப்பட்டனர்.

பின்னர் இவர்கள் 1500 ரூபா அபராதம் நீதிமன்றத்திற்கு கட்டினர்.

---

**கொத்தணி**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

முகாமைத்துவ அனுபவம் உள்ளவர்கள் இலங்கையில் குறைவாக உள்ள காரணத்தால்தனியார்துறையைபெருந் தோட்டத்தில் தான் தற்சமயம் அனுமதிக்கப்போவதில்லை என்றார்.

தனியாரிடம் பெருந்தோட்டங்களை நடாத்துவதற்குப் போதிய மூலதனம் இல்லை என்று ரஞ்சன் குறிப்பிட்டார்.

---

**பணமாக**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கே. அப்புத்துரை அவர்கள் தெரிவித்தார்.

மேலும் இவ்விடயம் பற்றி அவர் கூறுகையில் இலங்கையிலேயே முதலாவது இடத்தை காப்புறுதித் துறையில் யாழ். மாவட்ட காப்புறுதி கூட்டுத்தாபனம் வகித்து வந்தது. ஆனால் அண்மைக் கால வன்செயல்களால் யாழ் மாவட்டம் ஆறாம் இடத்துக்கு தள்ளப்பட்டிருந்தது. இப்பொழுது திரும்பவும் அமைதி நிலவுவதால் பழைய இடத்தை மிக விரைவில் பிடித்து விடுவோம் இதற்கு எமக்கு உடனடியாக நிரந்தர உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட வேண்டும் அண்மையில் இந்த காலியிடங்களை நிரப்புவதற்கென தகுந்த விண்ணப்பதாரிகளிடம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகப் பரீட்சையும் நடத்தப்பட்டது. ஆனால் தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் எவரும் உரிய இடத்தில் நியமிக்கப்படாதது குறித்து அவர் வருத்தப் தெரிவித்தார்.

இறுதியாக காப்புறுதி கூட்டுத்தாபன யாழ். மாவட்ட கிளையின் தற்போதைய செயற்பாடு பற்றி குறிப்பிடும் போது எமது கிளையிலிருந்து காப்புறுதிக் கொடுபணமாக வாரா வாரம் ஏறக் குறைய பத்து லட்சம் ரூபா வரை கொடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார் (லோ)

தப்பட்டு, மாதத்துக்குப் பத்து பேர்களுக்கு முல்லைத் தீவுத்திணைக்களத்தால் வழங்கப்பட்டு வருகின்றழ.

---

**பொலிஸ்**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

றாகலை போன்ற இடங்களில் பயிற்சி வழங்கப்படலாம்

தமிழ்மொழி மூல விரிவுரையாளர்கள் பதவிக்கான விண்ணப்பம் சப்இன்ஸ்பெக்டர், இன்ஸ்பெக்டர் தரங்களிலுள்ளவர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளது என்றார்.

அதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் 1200 பேர் அண்மையில் நடைபெற்ற பொலிஸ் நேர்முகப் பரீட்சையில் தெரிவாகியுள்ளனர்.

இவர்களுக்கான பொலிஸ் அறிக்கை பொலிஸ் நிலையங்கள் மூலம் வழங்கப்படுகின்றன. (37)

## மின்சாரத் தடை

(யாழ்ப்பாணம்)

அவசர திருத்த வேலைகள் காரணமாக நாளை 27ம் திகதி ஞாயிற்றுக்கிழமை சுன்னாகம் யாழ்ப்பாணம் ஆகிய பாரிய மின்மார்க்கத்தில் பின்வரும் இடங்களுக்கு மின் தடைசெய்யப்படும் அராலி வீதி, கண்ணாபுரம், பண்ணை குருநகர் கன்னியாஸ்திரிகள் மடம், மண்டைதீவு, நல்லூர் கனகரட்ணம்வீதி, அரியாலை, உப்புக்குளம் புங்கங்குளம், பாசையூர் ஆகிய இடங்களில் காலை 8மணியிலிருந்துமாலை ஐந்துமணிவரை மின்தடைப்பட்டிருக்கும் என வடபிராந்திய மின்சார சபை அறிவித்துள்ளது (லோ)

## வாழ்க்கைத் திறன் பாடநெறி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் அடுத்த வருடத்தில் மேலும் 30 பாடசாலைகளில் வாழ்க்கைத் திறன் பாடநெறி புதிதாகச் சேர்க்கப்படவுளளது.

தற்சமயம் யாழ் மாவட்டத்தில் 108 பாடசாலைகளில் 17,706 மாணவர்கள் வாழ்க்கைத் திறன் கல்வியை ஒரு பாடமாக பயின்றுவருவது இங்கு குறிப்பிடத்தக்கது. (மு)

## தமிழ் மொழித் தினம்

(தம்புலுவில்)

தம்புலுவில் கொத்தணிப் பாடசாலைகளுக்கான தமிழ் மொழித் தினம் கடந்த 18ம் திகதி கொத்தணி அதிபர் வி. ஜே. ஜெயராஜசிங்கம் தலைமையில் நடைபெற்றது கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

(மட்டக்களப்பு)

கல்வி அதிகாரிகள், கொத்தணி அதிபர்களின் செயல்பாடுகள் மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றன. இம்மதிப்பீடு அறிக்கையின் அடிப்படையில்தான் இனிமேல் பதவி உயர்வு வழங்கப்படும். எந்தவொரு நடவடிக்கைகளுக்கும் சட்டதிட்டத்திற்கு புறம்பாக நடைபெற என்னால் அனுமதிக்க முடியாது.

இவ்வாறு வட-கிழக்கு மாகாண கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சு செயலாளர் திரு. இ. ஜே. சற்குணராஜா இ. த. ஆ. சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்டகிளையினால் தமக்கு வழங்கப்பட்ட பாராட்டு விழாவிற்கு நன்றி தெரிவித்து பேசுகையில் தெரிவித்தார்.

இ. கி. மி. பெ. பாடசாலை மண்டபத்தில் திரு. வி. த. குமாரசாமி தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

அவர் தனது உரையில் மேலும் கூறியதாவது.

நாங்கள் 1987ஆம் 88ஆம் ஆண்டுகளில் பல இன்னல்கள் மத்தியில் கடமைசெய்தோம். ஒருவர் நல்ல தலைவராக செயல்பட வேண்டுமானால் நிர்வாகம் பரவலாக்கம் செய்யப்படல் வேண்டும். உத்தியோகத்தர்களை ஊக்குவித்து மேற்பார்வை செய்தல் முகாமையாளரின் பங்கு ஆகும். இவ் அடிப்படையில்தான் நாம் செயல்படவேண்டும்.

மாகாண கல்வி அமைச்சு எடுக்கும் தீர்மானத்திற்கு சகலரும் இணைந்து செயற்பட வேண்டுமென மாவட்ட கல்விப் பணிப்பாளர்கள் மகாநாட்டில் முடிவு செய்துள்ளோம்.

இடமாற்ற சபையின் தீர்மானம் மீறக் கூடாது என ஆசிரியர்களிடம் கூறுங்கள். மத்திய அரசின் இடமாற்ற கட்டளைகளை கொண்டுவர வேண்டாம்என்றும் கூறுங்கள்'

அப்படியானால் மாகாண சபை இருந்து என்ன பயன்? தனிநபர் சிறப்பு பெற வேண்டுமா? மாகாணசபை சிறப்பு பெறவேண்டுமா? என சிந்தித்து பார்க்க வேண்டும்.

அதிகாரங்களை நான் வைத்திருக்க விரும்பவில்லை. மாவட்ட கல்விப்பணிப்பாளர்களுக்கும் சகல அதிகாரங்களும் வழங்கிவிட்டேன். என்றார்.

மட்/மாவட்ட கல்விப்பணிப்பாளர் திரு. கு. சோமசுந்தரம், திருமலை மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. கே. கே. தியாகராசா உட்பட கோட்டக் கல்வி அதிகாரிகளும், இ. த. ஆ. சங்க கிளை பிரமுகர்களும் உரையாற்றினர். (37)

---

**வெலப்பிட்டி----**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மதகுரு அந்த ஊழியரை துப்பாக்கியால் சுட்டுவிடப் போவதாக அச்சுறுத்தல் செய்தார் என்ற முறைப்பாட்டை விசாரிக்க, பொலிஸார் அங்கு சென்றனர், அவ்விடத்தினை சோதனைசெய்த போது இவை கைப்பற்றப்பட்டன.

கோயிலின் அறையிலிருந்து அந்தரங்கக் களஞ்சிய சாலைக் செல்வதற்கென நிலத்தின் கீழ் சுரங்கப்பாதையொன்றினையும் பொலிஸார் கண்டுபிடித்தார்கள். பன்னிரண்டு குளிர்சாதனப் பெட்டிகளும் இரண்டு டி. பிறிசர்களும் கைப்பற்றப் பட்டுள்ளன.

கோயிலின் மதகுருவும் ஊழியர்கள் எனத் தெரிவிக்கப்பட்ட மூன்று யுவதிகளும் பொலிஸாரினால் அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார்கள் வெலப்பிட்டி கந்த என்ற பகுதியில் சமீபகாலத்தில் திடீரென்று ஏற்பட்ட ஆறு மரணங்கள் சம்பந்தமாகவும் பொலிஸார் விசாரணைகள் மேற்கொண்டுள்ளார்கள்

## நெடுந்தீவில் இந்தியமீனவர் கரை ஒதுங்கியுள்ளனர்

(நெடுந்தீவு)

நேற்று முன்தினம் வீசிய காற்று, மழை காரணமாக நெடுந்தீவு மணற்கரையில் இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த மீன்பிடி இழுவைப் படகு ஒன்று கரையொதுங்கியது.

இராமேஸ்வரம் எல். என். நாகராஜ் என்பவருக்குச் சொந்தமான எஸ். ரி. பி. 121 இலக்கம் கொண்ட ''சுடலை மாடன்'' என அழைக்கப்படும் இப்படகில் வந்தோர் பாதுகாப்பாகக் கரைசேர்ந்துள்ளனர். கடந்த வாரமும் நெடுந்தீவுக்கரையில் இந்திய மீன்பிடிப்படகொன்று கரையொதுங்கியது குறிப்பிடத்தக்கதாகும். (62)

## பட்டம் பெற்ற காலம் முதல் பட்டதாரிச் சம்பளம்

(மட்டக்களப்பு)

ஆசிரிய சேவையிலிருந்து பட்டதாரிபட்டம்பெற்ற ஆசிரியர்களுக்கான பட்டதாரி சம்பளம் பட்டம்பெற்ற திகதி முதல் வழங்கப்படும்.

இத் தகவலை வட-கிழக்கு மாகாண கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சு செயலாளர் திரு. இ. ஜே. சற்குணராஜா தெரிவித்தார்.

இதற்கான பணிப்புரை சகல மாவட்ட கல்விப் பணிப்பாளர்களுக்கும் விடுக்கப்பட்டுள்ளதாகவும்அவர் தெரிவித்தார். (37)

## பஸ் சேவை இன்மையால் மாணவர்கள் சிரமம்

(களுவாஞ்சிக்குடி)

தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் போக்குவரத்துக்கஷ்டம் அதிகரித்துள்ளது. நிலைமை சீரானதை தொடர்ந்து பயணிகள் தொகை பன்மடங்கு அதிகரித்ததும் முக்கிய காரணமாகும். இதனால் பாடசாலை மாணவர்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டு வருகின்றார்கள். பஸ் பயணத்திற்காக பலமணி நேரங்களை இவர்கள் தியாகம் செய்ய வேண்டி ஏற்பட்டுள்ளது.

முன்பு இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த கல்லாறு - கல்முனை குறுமண்வெளி களுவாஞ்சிக்குடி, களவாஞ்சிக்குடி மட்டக்களப்பு பாடசாலை பஸ் சேவைகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. இதனால் கிராமப்புற மாணவர்கள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகின்றனர். மேற்குறித்த பஸ் சேவைகளை உடன் ஆரம்பிக்க வேண்டுமெனவும் தற்போது பாடசாலைகள் இரு நேரமாக இயங்கத் தொடங்கியிருப்பதால் இச் சேவை மிக அவசியம் மேற்கொள்ளப்பட வேண்டுமென வும் இங்குள்ள மாணவர்கள் பெற்றோர்கள். நலன்விரும்பிகள் கோரியுள்ளனர். (45)

இவர்கள் எல்லோரும் இத் தீவின் குடிமக்கள்.

பிரச்சினைக்குரிய மக்களை கலந்துபேசாது செய்த-இன்று செத்துப்போன ஒப்பந்தங்களுக்கு மீள உயிர் கொடுக்க வேண்டிய தேவை இல்லை.

இன்று நாம் கேட்பதெல்லாம் இம்மக்களை நாடு கடத்தக்கூடாது என்பதுதான்.

எம்மைப் பொறுத்தவரை தமிழ் நாடும், தமிழக முதல்வரும் இவர்களுக்கு சிறிலங்கா அரசு குடியுரிமை வழங்கவேண்டும் எனக் கேட்டுக்கொள்ள வேண்டும், இவர்களை நாடு கடத்தும் முயற்சிக்கு ஆதரவு தரவும் கூடாது.

இனப் படுகொலையை எதிர்த்து தமிழகம் எப்போதும் எமக்கு ஆதரவு தந்து வந்தது அதேபோல மலையகம் வாழ் தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்படும் அடக்குமுறைகள், கொலைகள், நாடு கடத்தல் ஆகியவற்றிக்கு எதிரான போராட்டத்திற்கு தமிழக முதல்வரும், தமிழக மக்களும் முழுமையான ஆதரவைத் தரவேண்டும்.

---

## பரிசளிப்பு விழா

(கொழும்பு)

விவேகானந்த சபை நடத்திய சைவ சமய பாடப் பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் பரிசில்கள் பெறும் மாணவர்களுக்குப் பரிசளிக்கும் விழா யாழ். இந்துக்கல்லூரி மண்டபத்தில் இன்று காலை 9.30 மணியளவில் இடம் பெறும்.

## தகரக் கொட்டில்

(தம்புலுவில்

வினாயகபுரம் பாடசாலைகளில் இட நெருக்கடியைத் தவிர்க்கும் முகமாக தகரக் கொட்டில் ஒன்று அமைத்துக் கொடுக்கும் வேலைகளை தம்பிலுவில் - திருக்கோவில் மக்கள் முன்னணியின் பொறுப்பாளர் மதன் அவர்கள் கவனித்து வருகிறார்.

---

**பாராளுமன்ற**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வதோ விதிகளுக்கு முரணானதாகும்,

வாகனங்களைக் கைமாற்றுவதோ அல்லது விற்பதோ ஒழுங்கு விதிகளுக்கு முரணானது என்று மாகாண சபை உறுப்பினருக்கு அறியத் தரும்படி அரசாங்க விதியோகப் பகுதி ஆணையாளர் பணிக்கப் பட்டுள்ளார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31- ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு மே மாதம் 26-ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.